Registered as a Newspaper    பக்கங்கள் 6    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்களின் நாளேடு    Peoples Daily

நாதம் 05    திருவள்ளுவர் ஆண்டு 2025    பங்குனி 15    (28 3·94)    திங்கட்கிழமை    ஒலி 38

பொது சன நூலகம்
மாநகராட்சி மன்று
28-3-1994
யாழ்ப்பாணம்

## க.பொ.த. சாதாரண மாணவருக்கு 9-வதுபாடமாக ஆங்கில இலக்கியம்

பாடசாலைகளில் ஆங்கில இலக்கியத்தை மேலதிக ஒரு பாடமாக போதித்து க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் ஒன்பதாவது பாடமாக அதில் தோற்ற மாண வர்களை தூண்டுமாறு சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் கல்வி அமைச்சின் ஆங்கில மொழி இணைப்புப்பிரிவு அறிவுறுத்தியுள்ளது. பாடசாலைகளில் சாதாரண தரப் பரீட்சையில் மாணவர்கள் ஆங்கில இலக்கியப் பாடத்தில் தோற்றுவதற்கான தேவையுள்ள சகல வசதிகளையும் செய்து கொடுப்பது என கல்வி அமைச்சு தீர்மானித் துள்ளது. இத் திட்டம் இவ்வாண்டிலிருந்து நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

# சீனாவிடம் போர்க் கப்பல் கொள்வனவு திட்டம் அரசாங்கத்தால் கைவிடப்பட்டது

## நிதி பற்றாக்குறை என தெரிவிப்பு கடற்படைத் தளபதி ஆத்திரம்

(கொழும்பு)

சீனாவிடம் இருந்து ஐந்து போர்க் கப்பல்களைக் கொள் வனவு செய்யும் திட்டத்தை சிறிலங்கா அரசாங்கம் கைவிட்டுள் ளது. இத் திட்டம் கைவிடப்பட்டதற்கு நிதிப் பற்றாக்குறையே காரணம் என அரசாங்கம் தெரிவிப்பினும் இக் கொள்வனவு திட் டம் கைவிடப்பட்டமை குறித்து கடற் படைத் தளபதி வைஸ் அட்மிரல் சமரசேகரா பெரும் அதிருப்தி கொண்டுள்ளார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக சண்டே ஐலண்ட் பத்திரிகை தகவல் தருகையில், சீனாவிடமிருந்து ஐந்து போர்க் கப்பல்களை வாங்கும் தனது திட்டத்தை சிறிலங்கா அரசு கைவிட்டு விட்டதாகத் தெரிவித்துள் ளது.

சுமார் 75 கோடி ரூபா செலவில் சீனாவிடமிருந்து கப்பல்களை தனது படை களுக்கு வாங்க கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சமரசேகர சீனா சென்றுள்ள இவ் வேளையில் நிதிப் பற் றாக்குறை காரணமாக சீனப் போர்க் கப்பல்களை வாங்கும் திட்டத்தை கைவிட அரசாங்கம் முடிவெடுத் துள்ளது. இதன் காரண மாக கடற்படைத் தளபதி சமரசேகரா கடும் ஆத்திரம் கொண்டுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

தளபதி சமரசேகரா அடுத்த வாரம் சீனாவிலிருந்து திரும் பும் முன்னர் ஜனாதிபதி இது குறித்து இறுதிமுடிவு எடுக்கத் தவறினால் சீனாவிலிருந்து திரும்பியதும் கடற்படைத் தளபதி தமது பதவியை இராஜினாமா செய்யக்கூடும் என ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

## பொலிஸ் துப்பாக்கிச் சூடு 9 வயது சிறுவன் பலி

மட்டக்களப்பு அரசடி வீதி யில் பொலிசார் நடத்திய சர மாரியான துப்பாக்கிச் சூட்டி னால் ஒன்பது வயது சிறுவன் ஒருவன் பலியானான்.

கடந்த புதனன்று மேற்படி வீதியில் காணப்பட்ட சிலர் பொலிசாரைக் கண்டதும் ஓட்டம் பிடிக்கவே அவர் களை நோக்கி பொலிசார் ஒருவர் சரமாரியான துப் பாக்கிச் சூடு நடத்தினார். துப்பாக்கிச் சூட்டில் சிக்கிய நான்காம் ஆண்டில் கற்கும் ஒன்பதுவயது சிறுவன்ஒருவன் பலியானான்.

## மட்டு - வாழைச்சேனை வீதிச்சோதனை அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச் சேனை பிரதான வீதியில் படையினரின் சோதனைகள் மீண்டும் தீவிரமாக்கப்பட்டி ருப்பதுடன் சோதனை நிலை களும் அதிகரிக்கப்பட்டுள் ளன. நகரிலிருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்திற்குள் மூன்று சோதனை நிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பிலிருந்து கொழும்புசெல்வோர் மன்னம் பிட்டி வரையில் 10சோதனை நிலைகளில் மூட்டை முடிச்சு களுடன் இறங்கி ஏறவேண் டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதேவேளை வாகனேரிகுளத் திற்கு அண்மையில் பிரதான வீதியில் புதிய இராணுவ முகாம் ஒன்று கடந்த ஞாயிறு முதல் இயங்கிவருகிறது.

## யாழ். அரச அதிபர் ஹமில்டன் சந்திப்பு

(கொழும்பு)

வடபகுதிக்கு கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்ட பொருள்களை கப்பலில் பய ணிகள் கொண்டுசெல்லும் போது படையினர் காங்கே சன்துறையில் வைத்து அப் பொருள்களை பறிமுதல் செய் கின்றனர் என யாழ் அரச அதிபர் மாணிக்கவாசகர் பாதுகாப்பு அமைச்சின் செய லாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவிற்கு தெரிவித்துள் ளார்.

கொழும்பில் அரச அதிபர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. தூதுவர் குழு மட்டக்களப்பு விஜயம்

அமெரிக்கத் தூதுவர் ஸ்கபர் தலைமையிலான குழு வொன்று ஏப்ரல் 1ஆம் திகதி மட்டக்களப்பிற்கு விஜயம் செய்யவுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட நிலைமை குறித்து நேரடியாக அவதானிக்கவே குழுவினர் விஜயம் செய்ய விருப்பதாக தெரிவிக்கப்படு கின்றது.

தென்னாசிய விவகாரங் களுக்கு பொறுப்பான உதவி இராஜாங்கசெயலர் ரொபின் ரபெல், அமெரிக்க தூதர கத்தின் இரண்டாவது செய லாளர் பிராட் பிரிட்டென் ஆகியோரும் இக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

## பழுகாமத்தில் இராணுவம் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதல்

## சிறிலங்கா - பாகிஸ்தான் இடையே

# மிலேச்சத்தனமான தாக்குதல்

### அப்பாவிகளின் கை கால்கள் முறிந்தன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பழுகாமம் பகுதியில் இராணுவத்தினர் பொதுமக்கள் மீது நடத்திய கொடூரத் தாக்குதலினால் பலர் கை கால் முறிந்த நிலையில் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

கடந்த புதனன்று மாலை 6 மணியளவில் பழுகாமம் முகாம் இராணுவத்தினர் அக்கிராமத்தைச் சுற்றிவளைத்து அனைத்து மக்களையும் கூட்டிவந்தனர் ஆண்களை வேறாகப் பிரித்து கை கால்கள் உடையுமளவிற்குப் படையினர் இவர்கள்மீது தாக்குதல் நடத்தினர். இதனால் பதினைந்திற்கும் மேற்பட்டோர் மட்டக்களப்பு வைத்தியசாலையிலும் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## தாக்குதல் குறித்து விசாரணை நடத்துக

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பழுகாமம் கிராமத்தில் கடந்த புதன் கிழமை மாலை அப்பாவி கிராமவாசிகள் மேல் நடத்தப்பட்ட இராணுவத்தினரின் தாக்குதல் தொடர்பாக உட

(6ஆம் பக்கம் பார்க்க)

# முகாம்கள் மீது புலிகள் தாக்கலாம்; ராணுவத் தளபதி எச்சரிக்கை

### உசார் நிலையில் இருக்க உத்தரவு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதல் நடத்தலாம் எனக்கிடைக்கப்பெற்ற இராணுவப் புலனாய்வுத் தகவலையடுத்து வடக்கு கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களில் உள்ள பொறுப்பதிகாரிகள் எச்சரிக்கையாக இருக்கும்படி இராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா பணித்துள்ளார் என ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புதுவருடப்பிறப்பிற்குமுன்பாகவும் பின்பாகவும் இத்திடீர் தாக்குதல்களை புலிகள் மேற்கொள்ளலாம்என இராணுவப் புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன இத்தாக்குதல்களுக்காக ஆனையிறவு, பலாலி, காரைநகர், காங்கேசன்துறை ஆகிய பகுதிகளுக்கு அண்மையாக புலிப்போராளிகள் நகர்ந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பதுங்கியிருந்த ராணுவத்துடன் விடுதலைப்புலிகள் கடும் மோதல்

### ஒரு போராளி வீரச்சாவு

கடந்த 24ஆம் திகதி மாலை 5 மணியளவில் திருமலை வெருகல் பகுதியிலுள்ள கல்லிறவு காட்டுப்பகுதியால் விடுதலைப் புலிகள் செல்லும்போது அங்கு விடுதலைப் புலிகளை தாக்குவதற்காக மறைந்திருந்த இராணுவத்தினரைக் கண்டு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இத் தாக்குதல் 35 நிமிட நேரம் நடைபெற்றது. இம் மோதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார். வீரச்சாவு அடைந்த லெப். சோமேஸ்/அறிவாளி (பாக்கியராஜா திவ்வியகுமார் 7ஆம் வட்டாரம் சாம்பல்தீவு திருகோணமலை) என்பவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

# சிறிலங்கா - பாகிஸ்தான் இடையே நெருங்கிய ராணுவ ஒத்துழைப்பு

### இந்திய பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

(டில்லி)

சமீப வருடங்களாக பாகிஸ்தான் சிறிலங்காவுடன் விரிவாக்கப்பட்ட இராணுவ ஒத்துழைப்புகளைக் கொண்டிருக்கின்றது. உளவுத்துறை, இராணுவத் தளபாட விநியோகம் மற்றும் பயிற்சி ஆகியவற்றிற்கு இந்த ஒத்துழைப்பு விஸ்தரிக்கப்படுகிறது. இவ்வாறு இந்திய பாதுகாப்பு அமைச்சின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தாக்குதல் பலத்தையும், ஆயுதப் படையினர் துரிதமாக நகரும் சக்தியையும் அதிகரிக்கும் வகையிலான ஆயுதங்களை சிறிலங்காவிற்கு சீனா சமீபத்திய வருடங்களாக வழங்கிவருகிறது.

சீனாவும் பாகிஸ்தானும் ஏனைய அயல் நாடுகளுக்கும் ஆயுதங்களை வழங்கி வருகின்றன. பாகிஸ்தான், ஈரான், சவூதிஅரேபியா ஆகிய நாடுகள் கூடுதலான ஏவுகணைகளை சேகரிக்கத் திட்டங்களை கொண்டுள்ளன. தென் ஆசியப் பிராந்தியத்தில் ஆயுதப் போட்டா போட்டி ஒன்று ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் அச்சுறுத்தும் இராணுவ ஆயுதங்களை சேகரிக்கின்றது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இன்று படகுச்சேவை

புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இன்று கிளாலி - பூநகரிக் கிடையிலான விசேட படகுச்சேவை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# தேர்தல் ஒழுங்கீனம் குறித்து பொலிசார் உட்பட 500பேர் விசாரணை

(கொழும்பு)

ஏறாவூர் மற்றும் காத்தான்குடியில் நடைபெற்ற பிரதேச சபைத் தேர்தலில் இடம்பெற்ற ஒழுங்கீனங்கள் தொடர்பாகப் பொலிசார் உட்பட 500 பேரைக் குற்றப் புலனாய்வுத் துறை விசாரணை செய்து வருகிறது.

தேர்தலன்று கடமையில் இருந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மட்டக்களப்பு மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலின்போது கடமையைச் சரிவரச் செய்யத் தவறிய அதிகாரிகள் மீதும், தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்படி தேர்தல் ஆணையாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே பொலிஸ் மா அதிபர் பிறாங் டி சில்வா மேற்படி விசாரணைக்காக உத்தரவைப் பிறப்பித்துள்ளார். தேர்தல் மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது வழக்குத் தொடரும்படி தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு முன்னாள் அரச அதிபர் ஆர். மௌனகுருசாமி, பொலிசார் மற்றும் தேர்தல் உத்தியோகத்தர்களும் விசாரிக்கப்படவுள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலுக்கு இரு சிப்பாய்கள் பலி

(கொழும்பு)

மணலாறுப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு இராணுவச் சிப்பாய்கள் பலியானதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மணலாறுப் பகுதியில் குளத்தில் குளிக்கச் சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி கொல்லப்பட்டதுடன் இவரைக் காப்பாற்ற சென்ற மற்றுமோர் இராணுவச் சிப்பாயும் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

## தமிழ் அகதிகள் பாதுகாப்பு விமானப் படையிடம்

(கொழும்பு)

நீர்கொழும்பு, குடாப்பாடு காளிகோயிலில் தஞ்சமடைந்துள்ள தமிழ் அகதிகளின் பாதுகாப்புக்கு விமானப் படையினரை அழைப்பதற்கான உத்தரவை பாதுகாப்பு அமைச்சு பிறப்பித்துள்ளதாகவும், தற்போது நீர்கொழும்பு பகுதியில் விமானப் படையினர் ரோந்து மேற்கொண்டுவருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புத்தளம் குடாப்பாடு முந்தல் பகுதியில் இருந்து வெளியேறிய தமிழர்கள் நீர்கொழும்பை அடைந்ததும் மேற்படி பதற்றம் நீர்கொழும்பில் ஏற்பட்டதாகவும் இதை தொடர்ந்து சிறிலங்கா பிரதமர் தலைமையில் அலரிமாளிகையில் பாராளுமன்ற உறுப்பினர் பிரஜைகள் குழுவினருடன் நடைபெற்ற கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டதாக மேலும் தெரியவருகின்றது.

## வரி விளம்பரம்


**காணி விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு இராச வீதி வெலிங்டன் தோட்டத்திற்கு அருகில் 6 பரப்புக் காணி பிரதான வீதியில் விற்பனைக்குண்டு தொடர்பு: மா. வைகுந்தவாசன், பழைய வீதி, கோப்பாய் தெற்கு கோப்பாய். (7817)

**பாலர் ஆசிரியர் பயிற்சி**

ஆரம்பம் - 1994 - 04 - 02. ஜி. சி. ஈ (O/L) சித்தி தேவையில்லை சனி ஞாயிறு நேரில் கற்க முடியாதோர் தபாலிலும் கற்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம் உயர்கலைக் கல்லூரி ஆனைப்பந்தி - யாழ்ப்பாணம். (7861)

**விற்பனைக்குண்டு**

இறைச்சிக் கோழிகளும் 2 மாத பிறவுன் பேட்டுக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி த.பொ.மே. நிறுவனம் கடற்புலிகள் செயலகம் நவிண்டில் (7862)


## கண்டெடுப்பு

தயாசிலம் சிவசங்கர், குணரத்தினம், சிறிதரன், சுப்பிரமணியம், சிவநாதன் ஆகியோரது அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளலாம்.

ஃ ஃ

சந்தன் பிரியதர்சன் என்பவரது கடவுச்சீட்டும் பெறுமதி வாய்ந்த காசோலை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு பூநகரி நல்லூர் படகுச்சேவை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

இருவரது உளர் உணவு கூப்பன் பத்திரமும், பங்கீட்டு அட்டையும் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

க. பூச்சன் என்பவரே, இ. வல்லிபுரம் தர்மலட்சுமி, த. செல்வராசா என்பவர்களுக்குரிய இவற்றை கண்டெடுத்து ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் ஆதாரம் காட்டி பெறவும்.

ஃ ஃ

# மாணவர் அனுபவம்பெற வி. மை. இடமளிக்கிறது

மாணவர்கள் வகுப்பறையிலே பெற்றுக்கொள்ள முடியாத அனுபவங்களை விளையாட்டு மைதானத்திலேதான் வளர்க்கவும், பெறவும் முடிகிறது. இதுபோன்று ஒரு மாணவனுக்கு வகுப்பறையில் கிடைக்கிற அங்கீகாரத்தை விட மைதானத்திலே தான் அதிகளவு அங்கீகாரம் கிடைக்கிறது.

இவ்வாறு சங்கானை கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள் அண்மையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் கல்லூரி அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், இந்தக் கல்லூரி மாணவ, மாணவியரின் விளையாட்டுத்திறனை மிகவும் வரவேற்பதோடு எனது பாராட்டுக்களையும் தெரிவிக்கும் இதேவேளை கற்றல், கற்பித்தல் முறைகளிலும் மாணவர்கள் ஆசிரியர்கள் பெரும்பங்குகொண்டுள்ளனர் என்பது தெரிகிறது. அத்தோடு பெற்றோர்கள், நலன் விரும்பிகள் உட்பட அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்களும் இணைந்து இக்கல்லூரியின் தரத்தினையும், கல்வி உயர்வினையும் மேம்படுத்த மேலும் முன்வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மேலும் இந்நிகழ்வின்போது சுழிபுரம் சிற்றூர் பொறுப்பாளர் திரு. அப்பன் அவர்கள் கலந்து கொண்டு தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அநேக மக்கள், மாணவர்கள் மத்தியில் சுறுசுறுப்பாக நடைபெற்ற மேற்படி போட்டிகளில் 1 ஆம் இடத்தை பச்சை இல்லம் 445 புள்ளிகளுடனும், 2 ஆம் இடத்தை சிவப்பு இல்லம் 391.5 புள்ளிகளுடனும், 3 ஆம் இடத்தை மஞ்சள் இல்லம் 328 புள்ளிகளுடனும் வென்றெடுத்தன. போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள் வழங்கி கௌரவித்தார். (41)


## மென்பான விற்பனையாளருக்கு ஒரு நற்செய்தி !!

தற்போது பின்வரும் இடங்களில் TASTY மென்பானங்களை நீங்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்யலாம்.

1. மாருதி ஸ்ரோஸ், கே கே எஸ். றோட், வல்வெட்டித்துறை
2. வேலவன் ஸ்ரோஸ், பருத்தித்துறை
3. சாயி கிருஷ்ணா, வதிரிச்சந்தி, நெல்லியடி
4. முருகன் ஸ்ரோஸ், சிறுப்பிட்டி,
5. அறிவகம் சாவகச்சேரி
6. சாந்தி ஸ்ரோஸ், கண்டி வீதி, மனை



TASTE LINE INDUSTRIES (PVT) LTD,
14, Seenier Lane,
JAFFNA
(கி-8922)

புங்குடுதீவு - நயினாதீவு
பல நோ. கூ. சங்கம் (வ-து)
பதவி வெற்றிடம்-விலாசிச் சாதி


# குவைத்தில் வெளிநாட்டவர் நலன் காக்கும் சங்கம்

(கொழும்பு)

குவைத்தில் பணிபுரியும் வெளிநாட்டவர்களின் நலன்களை கவனிக்கவென குவைத் தொழிற்சங்க சம்மேளனம் அங்கு விசேட அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளது.

குவைத்தில் வேலை செய்யும் இலங்கையர் உட்பட வெளிநாட்டுத் தொழிலாளர்கள் தாங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை குவைத்தில் திறக்கப்படவிருக்கும் விசேட அலுவலகத்திற்கு தெரிவிக்கலாம் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க சம்மேளனம் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் தூதுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குவைத்தில் சுமார் ஒரு லட்சம் இலங்கையர்கள் வேலை செய்கின்றனர் வெளிநாட்டவர்களுள் எகிப்தியருக்கு அடுத்தபடியாக இலங்கையரே குவைத்தில் அதிகளவில் காணப்படுகின்றனர். எனவே எமது வெளிநாட்டு பிரிவின் முகாமையாளராக அப்துல் றஹீம் ஷந்திரி என்ற இலங்கையரை நியமித்துள்ளோம் எனவும் அக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# கொழும்பிலிருந்து வங்கிக்கு மண்ணெய் தருவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட இலங்கை வங்கிக்கு கப்பல் மூலமாக சுமார் இருபத்திமூன்று பீப்பா மண்ணெண்ணெய் எடுத்து வரப்படவுள்ளது.

இதைத் தொடர்ந்து யாழ். செயலகத்தில் இருந்து மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்வதை இலங்கை வங்கி நிறுத்திக்கொள்ள உள்ளதாக இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் திரு. கணேசமூர்த்தி தெரிவித்தார்.

ஆரம்பத்தில் யாழ். மாவட்ட அரச வங்கிகளுக்கு கொழும்பில் இருந்து நேரடியாக மண்ணெண்ணெய் எடுத்து வரப்பட்டது. பின்னர் ஏற்பட்ட நிர்வாகச் சிக்கல் மற்றும் போக்குவரத்துக் காரணங்களுக்காக யாழ். செயலகத்துக்கென எடுத்து வரப்படும் மண்ணெண்ணெயை வங்கிகள் கொள்வனவு செய்தன.

மக்களுக்கு விநியோகிப்பதற்கென செயலகத்துக்கு வரும் மண்ணெண்ணெயை வங்கி கொள்வனவு செய்து கொள்வது என்பது முறையற்ற செயல் என்று இதைச் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து வங்கிகளுக்கென நேரடியாக மண்ணெண்ணெயை எடுத்து வருவதற்கு தமது தலைமை அலுவலகம் இணங்கியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஈ) (நி)

# வெற்று தபால் பை இல்லை தபால் வரவு தாமதமாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கு தபால்களைக் கொண்டு வருவதற்கான வெற்று தபால் பைகள் இன்மையினால் இனிமேல் கப்பல் மூலம் தபால்கள் கொண்டுவருவது மேலும் தாமதமாகும் சூழ்நிலை ஏற்படவுள்ளதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் மூலம் தெரிய வருகின்றது.

யாழ். குடாநாட்டிற்குவரும் தபால் பொதிகளின் வெற்றுப்பைகள் கிரமமான முறையில் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படாமையால்மேற்படி நிலை ஏற்பட்டு இருப்பதாகவும் மேலும் தெரிய வருகின்றது.

இந்த நிலையைத்தவிர்க்கும் பொருட்டு தற்போது கொழும்பு சென்றுள்ள யாழ். அரசாங்க அதிபர், பிரதம தபால் அத்தியட்சகர் பிரிவுக்கு அவசர செய்தி யொன்றை அனுப்பியுள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

இதேவேளை யாழ். குடாநாட்டில் இருந்து வெற்று தபால் பைகளை கப்பல் மூலம் கொண்டு செல்வதை ஒரு முறை கப்பல் தலைவர் மறுத்ததைத் தொடர்ந்தே இப் பைகளை அனுப்புவதற்கு நடவடிக்கையெதையும் மேற்கொள்ளவில்லையென தெரிய வருகின்றது. (நி) (ஈ)

# மாற்றாந்தாய் போக்கில்

# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்லங்களுக்கிடையேயான தடகளப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் யேசுதாசன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி. புவேந்திரன் முதன்மை விருந்தினராகவும் த. அருணகிரிராசா செல்வி நன்மனர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஃ ஃ ஃ

சந்திரா தனபாலசிங்கம் அவர்களின் சில மனிதர்கள் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று மாலை நான்கு மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் திரு து. வைத்திலிங்கம். திருமதி ஆதிலட்சுமி சிவகுமார், திரு அ. யேசுராசா ஆகியோரின் விமர்சனவுரைகளும், திரு சரவணபவனின் (சிற்பி) ஏற்புரையும் இடம்பெறவுள்ளன.

(குருநகர்)

பாசையூர் அந்தோனியார் றோ.க.மகளிர் வித்தியாலய இல்லமெய்வல்லுனர்போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2, மணிக்குவித்தியாலய மைதானத்தில் அதிபர் சங்-சகோதரிசொலிகாதலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராகயாழ் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. அருணாசலமும் சிறப்பு விருந்தினராக பாஷையூர் பங்குத்தந்தை வண ஜி ஜெயக்குமாரும் கௌரவ விருந்தினராக கடற்புலிகள் மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி ஈழத்தரசியும் கலந்து கொள்வர் (21)

(யாழ்ப்பாணம்)

ஜொனியன்ஸ் அணிக்கும் யாழ். பல்கலைக்கழக அணியினருக்கு மிடையிலான ஹொக்கி ஆட்டம் இன்று யாழ்பல்கலைக்கழக பழைய மைதானத்தில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது (05)

# தொழிலாளி காயம்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து லொறி ஒன்றிற்கு பரல்கள் ஏற்றிக்கொண்டிருந்த தொழிலாளி ஒருவரின் கழுத்தில் பரல் விழுந்ததில் படுகாயமடைந்த நிலையில் தொழிலாளி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

சரவெட்டியைச் சேர்ந்த தவராசா (வயது 28) என்பவரே இவ்வாறு காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (யோ

## நினைவு கூருகின்றோம்..: 1994-03-28

1984-ம் ஆண்டு இதேதினத்தில் சுன்னாகத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட 08 தமிழர்கள்

1989-ம் ஆண்டு திருமலை - நிலாவெளிப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**தயான்** (சின்னராசா அமுதலிங்கம் - நிலாவெளி- திருமலை)

பொத்துவில் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம்லெப். கலா** (செல்லக்குட்டி சுவேந்திரராசா- பொத்துவில் - அம்பாறை)

1991-ம் ஆண்டு மட்டு - வினாவெட்டுவான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**விசு** (கென்டி ராசன் அனிஸ்டன் - ஜெயந்திபுரம் மட்டு)

அம்பாறை - காரைதீவுப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**ரமணி** (அழகையா இந்திரன் - காரைதீவு - 02 - அம்பாறை)

(தென்மராட்சி)

கண்டி வீதி அரியாலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கதிர்காமநாதன் - ஸ்கந்தன் என்பவருடைய 731460558v இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், ஒரு தொகைப் பணமும் பேசுடன் இவ்வாரம் கொடிகாமம் கண்டிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதற்குரியவர் உடன் தகுந்த ஆதாரத்தினைக்காட்டி தென்மராட்சி அரசியல் துறைச்செயலகத்தில்பெற்றுக் கொள்ளலாம். (86)

## இரவுவேளை ஊரடங்கு

(கொழும்பு)

தென்மாகாணம் காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களில் நேற்றிரவு 8மணி முதல் இன்று காலை 5மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருந்தது.

தேர்தல் நடைபெற்ற கடந்த கிழமை முதல் தென் மாகாணத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## முதலாம் தவணை பரீட்சை ஆரம்பம்

(வடமராட்சி)

கரவெட்டி கல்விக் கோட்டத்தில் முதலாம் தவணைப் பரீட்சை பாடசாலை மட்டத்தில் நாளை முதல் அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை நடைபெறும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கி. சிவராசா தெரிவித்தார். அதே சமயம் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடப் புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வேர)

---


பல நோ. கூ. சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்-லொறிச்சாரதி

கல்வித் தகைமை: 5-ம் வகுப்புச் சித்தி,
லொறிச் சாரதிக்கான உத்தரவுப் பத்திரமும் 4 வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.
வயது : 18 — 40
சம்பளத் திட்டம்: 805 - 1260 / 25x7 - 35x8 (இதர படிகளும்)
பிணை ரொக்கம்: 5000/-

விண்ணப்பங்கள் யாவும் 12-04-1994-ம் திகதிக்கு முன் நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ கீழ்க் காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

பொதுமுகாமையாளர்,
புங்குடுதீவு-நயினாதீவு பல நோ.கூ.சங்கம்
801/1, 8-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (சி-8934)


---

## மாற்றாந்தாய் போக்கில் அரசு எம்மை நடத்துகிறது

- தொண்டமான்

அரசு எமது மக்கள் விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தான் நடந்து வருகிறது. ஆகையால் எமது சமுதாயம் ஒன்றுபட்டால் தான் எதையும் வெல்லமுடியும்.

இவ்வாறு கிராமிய தொழில்துறை அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்தார். இலங்கை-இந்திய பேரவையின் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறுகையில், நமது சமுதாயம் பணவசதியும், படித்தவர்களும் குறைந்த சமுதாயம் ஆகும். நமது சமுதாயத்திற்கு இன்று கல்வி மிக மிக அவசியமாக தேவைப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

---

## நிவாரண விநியோகம்

இடம் பெயர்ந்தோருக்கான பெப்ரவரி மாத இறுதி இருவார இலவச நிவாரண உலர் உணவுப் பொருள்களாக அரிசி, மாவு, சீனி, தேயிலை, மல்லி, தீப்பெட்டி ஆகிய பொருள்கள் வழங்கப்படும் என யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலில் தெரிவிக்கப்படுகின்றது.

---


# PRIMA - பிறிமா

## கால்நடை விவசாயிகளுக்கோர் அன்பான வேண்டுகோள்

நீங்கள் மாதாந்தம் பாவிக்கும் அல்லது தேவைப்படும் பிறிமா கோழித்தீன், பிறிமா மாட்டுத்தீன் மற்றும் பிறிமாவின் கால்நடை உணவுகள், பிறிமா கோழிக் குஞ்சுகள் (புறொயிலர், லேயர்) பற்றிய புள்ளிவிபரம் ஒன்றை திரட்டுவதற்காக பிறிமாவின் யாழ். மாவட்ட முகவராகிய நாம் இன்று தொடக்கம் ஏப்ரல் 8.ம் திகதிவரையும் ஈடுபட்டுள்ளோம். நேரடியாக ஒவ்வொருவரையும் சந்திக்கமுடியாத இக்காலகட்டத்தில் பத்திரிகை வாயிலான விளம்பரமூலம் உங்களை சந்திக்கின்றோம் தயவுசெய்து நீங்கள் பாவிக்கும் அல்லது தேவைப்படும் பிறிமா கால்நடை உணவு- வர்க்கங்கள் பற்றியும், பிறிமாவின் கோழிக் குஞ்சுகள் பற்றியும் (புறொயிலர், லேயர்) நேரடியாகவோ அல்லது தபால் அட்டை மூலமாகவோ தயவுசெய்து எமக்கு அறியத்தாருங்கள். இது யாழ்மாவட்ட தேவைகளை நிர்ணயிக்க, தட்டுப்பாடு இன்றி விநியோகிக்க எமக்கு உதவியாக இருக்கும்.

குறிப்பு; எம்மிடம் மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு நேரடி விநியோகம் பருத்தித்துறையில் இருந்து வழங்கப்படும்.

அலுவலகம்;

மாலவன் வர்த்தக நிலையம்
MALAVAN TRADE CENTRE
138, மானிப்பாய் வீதி,
138, MANIPAY ROAD,
யாழ்ப்பாணம்.
JAFFNA.

AUTHORIZED DEALERS FOR;
CEYLON GRAIN ELEVATORS LIMITED
(PRIMA FEEDS & CHICK)
JAFFNA DISTRICT

பிறிமாவின் அங்கீகரிக்கப்பட்ட யாழ் மாவட்டமுகவர்; (7858)


---

ரமணி (அழகையா இந்திரன் - காரைதீவு - 02 - அம்பாறை)

கீரிமலையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

கபிலன் (கந்தசாமி சிவகுமார் - மாவடி, வட்டுக் கோட்டை கிழக்கு - யாழ்)

வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

லெப். துஸ்யந்தன் (பொன்னையா தனபாலன்- பூந்தோட்டம் - வவுனியா)

2-ம் லெப். அலெக்ஸ் (சோமசுந்தரம் தனபால சுந்தரம் - இராஜேந்திரன்குளம் - வவுனியா)

ஜெனா (மகாலிங்கம் முத்துராசா - நொச்சிக்குளம்- வவுனியா)

சிறி (சிவலிங்கம் பெருமாள் - மாறம்பைக்குளம் - வவுனியா)

சுகிர்தன் (கந்தையா யோகராசா - செட்டிகுளம் வவுனியா)

வரதன் (தவசி சுப்பிரமணியம் - சின்னக்குளம்- வவுனியா)

வள்ளல் (கனகரத்தினம் குமாரச்சந்திரன் - இரத்தினபுரம் கிளிநொச்சி)

மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

ஜெகன் (வேலாயுதம் ஜெயகாந்தன் - பன்னாலை யாழ்)

1992-ம் ஆண்டு பூநகரி - கறுக்காய்தீவுப் பகுதியிலுள்ள சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

கப்டன் நிதிதரன் [ அல்பேட் (சின்னராசா ஜீவகரன் - தளவாய், பன்குடாவெளி, மட்டு)

மேஜர் விவேகன் [ அர்ச்சுன் (சூசைப்பு இளபகுமார் - 5-ம் வட்டாரம், வங்காலை, மன்னார்)

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

சித்தன் (பொன்னுச்சாமி ஜெயராம் - பூவரசங்குளம் வவுனியா)

2-ம் லெப். ஜெகநாத் [ செங்கதிர்வாணன் (வல்வெட்டித்துறை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-8927)

# மாணவர் அரங்கு

# விஞ்ஞானம்

## பகுதி A

### தகனம்

01. வெப்பத்தையும் ஒளியையும் விரைவாக வெளிவிடும் இரசாயன தாக்கம் தகனமாகும்.
02. தகனத்தின்போது எரிபொருளில் உள்ள காபன் துணிக்கை உடைக்கப்பட்டு எரிபொருளில் உள்ள சக்தி வெளி விடப்படுகிறது.
03. எரிபொருளில் உள்ள சக்தி இரசாயன சக்தியாகும். இது வெப்பமாகவும் ஒளியாகவும் மாற்றம் அடைகிறது; எனவே தகனத்தின்போது நடைபெறும் சக்தி மாற்றம்
   இரசாயன சக்தி ————> வெப்பம் + ஒளி,
04. இலங்கையில் பயன்படுத்தும் எரிபொருட்களும் அவற்றில் உள்ள மூலகங்களும்:

| எரிபொருள் | மூலகம் |
|---|---|
| நிலக்கரி | C |
| மண்ணெய்<br>பெற்றோல்<br>டீசல்<br>மெழுகு<br>உயிர் வாயு (மெதேன்)<br>திரவ பெற்றோலிய வாயு (L. P. Gas) | C, H |
| மதுசாரம்<br>தேங்காய்நெய்<br>விறகு | C, H, O |

∴ காபனையும் ஐதரசனையும் கொண்டவை ஐதரோகாபன்கள் என பொதுவாக அழைக்கப்படும்;

05. தகன தாக்க சமன்பாடு
   எரிபொருள் + ஒட்சிசன் ——> காபனீர் ஒக்சைட் + நீர் + சக்தி

குறிப்பு :- 1. ஒட்சிசன் - தகனதுணையி
2. தகனத்தின் விளைவுகள் $CO_2$ $H_2O$, சக்தி
3. ,, சடப்பொருள் விளைவு — $CO_2$, $H_2O$ எனக்கொள்க

06. தகனம் பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது
1. எரிபொருளின் பௌதீக நிலை
2. எரிபற்று நிலை
3. தகனத்துணையி

07. எரிபொருள் தகனத்துணையுடன் சேரும் தொடுபரப்பே பௌதீக நிலையாக கொள்ளப்படும்; பௌதீக நிலை தகனத்தை பாதிப்பதை பின்வரும் சந்தர்ப்பங்களில் இருந்து அறியலாம்;
1. கொத்தாத விறகிலும் கொத்திய விறகு எரிதல்
2. இரும்புத்துண்டு எரியாது இரும்புத்தூள் எரியும்
3. மண்ணெய் பாத்திரத்தில் உள்ளபோது எரியாது விசிறப்படும் பொழுது எரிதல்

08. எரிபற்று நிலை:
1. ஒரு பொருள் எரிய தொடங்கும் இழிவு வெப்பநிலை எரிபற்று நிலை ஆகும்
2. எரிபற்று நிலை குறைந்த பொருட்களே விரைவில் எரியும்
   உ+ம்; மண்ணெய் தேங்காய் நெய்யை விட எரிபற்று நிலை குறைந்தது எனவேதான் மண்ணெய் விரைவில் தீப்பற்றுகிறது

குறிப்பு: இங்கு உதாரணத்தில் குறித்த விடயம் மாணவர்களை இவ்வாறு வந்தடையலாம்:
தேங்காய்நெய் விளக்கிலும் மண்ணெய் விளக்கு விரைவில் எரிய ஆரம்பிக்கும் ஏன் என வினவலாம்?

விடை: மண்ணெய் தேங்காய்நெய்யிலும் எரிபற்றுநிலை குறைந்ததாகும் எனவே மண்ணெய் விளக்கு விரைவில் எரிய ஆரம்பிக்கிறது என கூறலாம்;

09. தகனம் தகனத்துணையி கிடைப்பதை பொறுத்து பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.

(II) பூரணமற்ற தகனம் பற்றியவை
1. ஒட்சிசன் குறைவாக உள்ளபோது நடைபெறும்
2. எரிபொருளில் உள்ள முழுகாபனும் உடையாது
3. குறைந்தளவு வெப்பம் தோற்றுவிக்கப்படும்
4. சுவாலை பிரகாசமான மஞ்சள் நிறமுடையதாக இருக்கும்

குறிப்பு:- உடையாத காபன் துணிக்கைகளே சுவாலைக்கு பிரகாசத்தைக் கொடுக்கின்றன.

விஞ்ஞான விளக்கம்:
அரிக்கன் லாம்பிற்கு சிமிலிபோடாத போதிலும் சிமிலி போடப்பட்டபின் பிரகாசம் அதிகரித்தல்

விடை:- சிமிலி இடப்படாமல் உள்ளபோது சுவாலைக்கு கூடியளவு ஒட்சிசன் கிடைக்க பூரணதகனம் நடைபெறும் இதனால் சுவாலை பிரகாசமற்று காணப்படும். சிமிலி இடப்பட்டதும் கிடைக்கும் ஒட்சிசனின் செறிவு கட்டுப்படுத்தப்பட பூரணமற்ற தகனம் நடைபெற சுவாலை பிரகாசத்தைப் பெறுகிறது

12- மெழுகுதிரிச் சுவாலை
(1) இதில் மெழுகாவியே எரிகிறது
(2) நான்கு வலயங்களை கொண்டது அவையாவன:
   1. கண்ணுக்குமட்டாக புலப்படும் ஒளிரில் வலயம் (சுவாலையின் வெளியில் உண்டு)
   (2) மஞ்சள் நிற ஒளிர் வலயம்
   (3) இருள் வலயம்
   (4) அடியிலுள்ள நீல நிற வலயம்

குறிப்பு:- (1) மட்டாக புலனாகும் ஒளிரில் வலயத்திலும் நீலநிற வலயத்திலும் பூரண தகனம் நடைபெறும்
(2) மஞ்சள் நிற ஒளிர் வலயத்தில் பூரணமற்ற தகனம் நடைபெறும்
(3) இருள் வலயத்தில் எரியாத மெழுகாவி உண்டு;

13. தீயணைத்தல் பற்றி தெரிந்திருக்கவேண்டியவை
(1) எரிபொருளிற்கு தகனத்துணை கிடையாது தடைசெய்தல் எரிபொருளின் வெப்ப நிலையை எரிபற்று நிலை அடையவிடாது தடுத்தல் போன்ற நடவடிக்கைகளால் தீயணைக்கப்படும்
(2) பொது முறைகள்:- நீர், மணல் போன்றவற்றை எரியும் பொருளின்மீது இட்டு தகனத்துணையின் தொடர்பை துண்டித்தல் நீர் விசிறும் பொழுது எரிபொருளின் வெப்பநிலை குறைந்து எரிபற்று நிலை அடையாது தடுத்தல். அத்துடன் நீராவியால் தகனத்துணை எரியும் பொருள் அடையாது ஆற்றல்
(3) சோடியத்தீ எண்ணெய்த்தீக்கு நீரைபயன்படுத்த முடியாது காரணம், (1) சோடியம் நீருடன் தாக்கமடையும்பொழுது வெப்பம் தோன்றி மேலும் தீப்பற்றும் என்பதால்
(2) எண்ணெய் நீரில் மிதந்து மேலும் வளியுடன் தொடர்பு பட்டு எரியும் என்பதனால்
(4) மின்தீக்கு:- மின்னை கடத்தாத பதார்த்தமான காபன் நாற்குளோரைட் ($CCl_4$) தீயணைகருவியை பயன்படுத்தலாம்
(5) எண்ணெய் தீக்கு:- நுரை தீயணை கருவி பயன்படுத்தலாம்
(6) 1. சோடா அமிலத் தீயணை கருவியில் நீர் விசிறப்படுவதனால் எண்ணெய், சோடிய தீகளுக்கு பயன்படுத்த முடியாது
2. இது மின்னைக் கடத்துவதனால் மின்தீக்கும் பயன்படுத்த முடியாது;

## பகுதி B
## தாவர தொழிற்பாடுகள்

### 02 ஒளித்தொகுப்பு
01) ஒளித்தொகுப்பு பச்சயம் உள்ள தாவரங்களில் ஒளியுள்ள போது நடைபெறும் செயல்முறையாகும்;
02) ஒளித்தொகுப்பில் $CO_2$, $H_2O$ ஆகியவை சூரிய ஒளியால் உணவாக மாற்றப்படுகிறது;
03) ஒளித்தொகுப்பு தாக்கத்தில்
   அ) மூலப்பொருள்:- $CO_2$ $H_2O$
   ஆ) ஊக்கி:- பச்சயம்
   இ) விளைவு:- ஆரம்பவிளைவு- குளுக்கோஸ் $C_6H_{12}O_6$
   ஈ) பக்க விளைவு - ஒட்சிசன்
   இறுதிவிளைவு- மாப்பொருள் $(C_6H_{10}O_5)_n$
04) இத்தாக்கத்தின்போது நடைபெறும் சக்திமாற்றம்
   ஒளிச்சக்தி ————> இரசாயனசக்தி
05) தாக்க சமன்பாடு

$$6CO_2 + 6H_2O \xrightarrow[\text{பச்சயம்}]{\text{சூ. ஒளி}} C_6H_{12}O_6 + 6O_2$$

06) நீரில் உள்ள ஒட்சிசனே பக்க விளைவாக வெளிவிடப்படுகிறது;
07) இலையின் நிறத்திற்கு காரணமான பதார்த்தங்கள்

∴ பச்சை நிறமுடைய இலை ஒன்று உதிர்வதற்கு முன் ஏன் மஞ்சள் நிறமாக மாறுகின்றது என சிந்தியுங்கள்

∴∴ அவ்விலையில் மேற்குறித்த நான்கு நிறப்பொருள்களும் காணப்படும் இவற்றில் குளோரோபில் கூடவாகையால் பச்சைநிறமாக உள்ளது குளோரோபில் வாழ்க்கைக்காலம் குறைந்தது இது முதலில் அழிய சந்தோபில் கூடிய செறில் காணப்படுவதால் மஞ்சள் நிறமாக மாறுகிறது

08. இலையில் ஒளித்தொகுப்பு நடைபெற்றுள்ளதை அங்கு தோன்றும் மாப்பொருளே உறுதி செய்கிறது. இதற்காகவே இலையில் மாப்பொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது;
இச்செய்கையின் படிமுறைகளும் காரணமும்,
1) இலையைக் கொதிநீரில் அவித்தல் (கலத்தை இறக்கச் செய்ய)
2) அற்ககோலில் கழுவுதல் (பச்சையத்தை அகற்ற)
3) அயடீன் சேர்த்தல் (மாப்பொருளை அறிய)

09. இலைக்கலங்களில் பச்சயத்தைக்கொண்ட கலங்கள்?
அ) 1) வேலிக் காற்புடைக்கலவிழையம் (அதிகளவு பச்சயம் இதில் உண்டு)
2) கடற்பஞ்சு புடைக்கலவிழையம்
3) காவற்கலம்

ஆ) பச்சயமற்ற கலங்கள் - மேற்றோற் கலங்கள்
குறிப்பு:- நீரினுள் அமிழ்ந்து வாழும் தாவரத்திலும் நிழலில் வாழும் தாவரங்களிலும் மேற்றோற் கலத்தில் பச்சயம் காணப்படலாம்;

10.

| பகுதி | | தொழில் |
|---|---|---|
| இலைவாய்<br>காற்றிடைவெளி | - | வாயுப்பரிமாற்றம் |
| காவற்கலம் | - | இலைவாயின் பருமனைக் கட்டுப்படுத்தல் |

## பகுதி C

### அமுக்கம்

01. ஒரு சதுர அலகு பரப்பில் செங்குத்தாகத் தாக்கும் விசை அமுக்கம் ஆகும்;
02. $$\text{அமுக்கம்} = \frac{\text{விசை}}{\text{பரப்பு}}$$
03. அமுக்கத்தின் அலகு $NM^{-2}$
04. அமுக்கத்திற்கும் பரப்பிற்கும் இடையிலுள்ள தொடர்பு
   அ) பரப்பு கூட அமுக்கம் குறையும்
   ஆ) பரப்பு குறைய அமுக்கம் கூடும்

(05) பரப்பைக் கூட்டி அமுக்கத்தை குறைக்கும் சந்தர்ப்பங்கள்
1. தண்டவாளங்களின் கீழ் மரக்கட்டை இடுதல்
2. சேற்று நிலங்களில் பலகை போட்டு நடத்தல்
3. மூடையை தலையில் சுமக்காது முதுகில் சுமக்கும் பொழுது இலகுவாக இருத்தல்
4. குண்டூசியின் தலை தட்டையாக இருத்தல்

(06) பரப்பை குறைத்து அமுக்கத்தைக் கூட்டும் சந்தர்ப்பங்கள்
1. ஆயுதங்களின் முனைகளை கூராக்கல்
2. சவர்க்காரத்தை இழையால் வெட்டும்போது இலகுவாக இருத்தல்
3. நிலத்தில் செலுத்தவேண்டிய தடியின் முனையை கூராக்கல்

(07) வளிமண்டல அமுக்கம்
1. வளிமண்டல அமுக்கம் பாரமானியால் அளவிடலாம்
2. பாரமானி இருவகைப்படும் 1. திரவப் பாரமானி
   2. திரவமில் பாரமானி (அனிரொயிட் பாரமானி)
3. திரவ பாரமானியில் இரசம் பாரமானித் திரவமாக பயன்படும் இதை பயன் படுத்துவதற்குரிய காரணங்கள்
   (1) அடர்த்தி கூடிய திரவமாகையால் உபகரணம் சிறிதாக அமையும்
   (2) இலகுவில் ஆவியாகாது
4. சாதாரணமாக கடல் மட்டத்தில் வளிமண்டல அமுக்கம் 760m m or 76 cm இரச நிரலாகும்
5. திரவ பாரமானியில் இரசநிரலின் மேலுள்ளவெளி தொறி செல்லியின் வெற்றிடம் எனப்படும்
6. வளிமண்டல அமுக்கம் நாளுக்குநாள் இடத்திற்கு இடம் வேறுபடும்
7. வளிமண்டல அமுக்கம் பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது
   (1) இடத்தின் உயரம்

தேங்காய்நெய் விளக்கிலும் மண்ணெய் விளக்கு விரைவில் எரிய ஆரம்பிக்கும் ஏன் என விளவலாம்?

விடை: மண்ணெய் தேங்காய்நெய்யிலும் எரி ற்றுநிலை குறைந்ததாகும் எனவே மண்ணெய் விளக்கு விரைவில் எரிய ஆரம்பிக்கிறது என கூறலாம்;

09. தகனம் தகனத்துணையி கிடைப்பதை பொறுத்து பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.

1. பூரணதகனம் (நிறைதானம்)
2. பூரணமற்ற தகனம் (நிறைவில் தகனம்)

10. பூரண தகனம் பற்றி அறிந்திருக்க வேண்டியவை:

1. போதியளவு ஒட்சிசன் கிடைக்கும்பொழுது நடைபெறும்
2. எரிபொருளில் உள்ள முழுக்காபனும் உடைக்கப்படும்
3. கூடியளவு வெப்ப சக்தி உண்டாகும்
4. சுவாலை பிரகாசமற்ற இளநீ நிறமுடையதாக இருக்கும்;

குறிப்பு:- பூரணதகனத்தின் போது கூடியளவு வெப்பம் தோன்றுவதனால் விரைவாக சமைக்க முடியும். அத்துடன் எரிபொருள் விரயம் தவிர்க்கப்படும். இதனால் சமையல் செய்வதற்கு பூரணதகனமே சிறந்தது

ஒளிச்சக்தி ——> இரசாயனசக்தி

05) தாக்க சமன்பாடு

$$6CO_2 + 6H_2O \xrightarrow[\text{பச்சயம்}]{\text{சூ ஒளி}} C_6H_{12}O_6 + 6O_2$$

06) நீரில் உள்ள ஒட்சிசனே பக்க விளைவாக வெளிவிடப்படுகிறது;
07) இலையின் நிறத்திற்கு காரணமான பதார்த்தங்கள்

| நிறம் | காரணமான பதார்த்தம் |
|---|---|
| பச்சை | குளோரோபில் |
| மஞ்சள் | சந்தோபில் |
| செம்மஞ்சள் | கரட்டின் |
| ஏனைய நிறங்கள் | அந்தோசயனின் |

குறிப்பு- குறித்த ஒரு நிற இலையில் மேற்குறித்த எல்லா நிறப்பொருள்களும் காணப்படும் ஆனால் இவற்றில் எந்நிறப்பொருளின் நிறம் அதிகமாக காணப்படுகிறதோ அந்நிறத்தையே இலை காட்டும்.

5. திரவ பாரமானியில் இரசநிரலின் மேலுள்ளவெளி டொரிசெல்லியின் வெற்றிடம் எனப்படும்
6. வளிமண்டல அமுக்கம் நாளுக்குநாள் இடத்திற்கு இடம் வேறுபடும்
7. வளிமண்டல அமுக்கம் பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது
   (1) இடத்தின் உயரம்
   (2) வளிவெப்ப நிலை
   (3) ஈரப்பதன்

(08) மேற்கூறிய காரணிகள் ஒவ்வொன்றும் அதிகரிக்கும்பொழுதுவளிமண்டல அமுக்கம் குறையும்

(மிகுதி தொடரும்)

- அருள்நேசன்

# யாழ்ப்பாண மாவட்ட மக்கள் வங்கிகளில் சுருக்கெழுத்தாளர் (தமிழ்/ஆங்கிலம்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கு விடை அளிக்கும் வழிமுறை

ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள யாழ்ப்பாண மாவட்ட மக்கள் வங்கி சுருக்கெழுத்தாளர் (தமிழ் | ஆங்கிலம்) பதவிகளுக்கான ஆட்சேர்ப்புப் போட்டிப்பரீட்சை இரு பகுதிகளாக நடைபெறும்.

முதலாவது பகுதியில் சுருக்கெழுத்து வேகம் கணிப்பீட்டுப் பரீட்சையும் இரண்டாவது பகுதியில் தட்டச்சு வேகக் கணிப்பீட்டுப் பரீட்சையும் நடைபெறும். இப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் நன்மை கருதி இக்கட்டுரை பிரசுரமாகிறது;

சுருக்கெழுத்துப் பரீட்சையில் தமிழ், ஆங்கிலப் பிரிவுகளுக்கு முறையே 350, 400 சொற்களைக்கொண்ட பந்திகள் நிமிடத்திற்கு 70,80 சொற்கள் என்ற வீதத்தில் 5 நிமிடங்களுக்குத் தொடர்ச்சியாக மேற்பார்வையாளரால் பரீட்சார்த்திகளுக்கு வாசிக்கப்படும்; பரீட்சார்த்திகள் வாசிக்கப்படும் பந்தியை சுருக்கெழுத்தில் எழுதவேண்டும்;

பந்தி ஒருமுறை மட்டுமே வாசிக்கப்படும், எனவே பரீட்சார்த்திகள் வாசிப்பதை மிக உன்னிப்பாக செவிமடுத்து குறியீடுகளை எழுத வேண்டும்: எச்சந்தர்ப்பத்திலும் வாசிப்பதுதெளிவில்லை எனக் கூறக்கூடாது, இப்படிக் கூறினால் அது மண்டபத்தில் உள்ளஏனையோருக்குஅசௌகரியத்தைக் கொடுக்கும்; அதன் காரணமாக அம் மண்டபத்திலுள்ள பரீட்சார்த்திகள் எவருமே சித்தியடைய முடியாத சூழ்நிலை ஏற்படும்

பரீட்சார்த்திகள் பரீட்சையைக் குறிக்கோளாகக் கொண்டு பரீட்சைக்கு விண்ணப்பித்த நாளில் இருந்தாவது தொடர்ந்து கூடிய பயிற்சிகளில் ஈடுபடுவார்கள் என நாம் நம்பலாம். இவ்வாறு பயிற்சிகளில் ஈடுபடும் போது தமது வேகத்தைக் கூடுதலாக எழுதுவதற்கு தனிக்குறிச் சொற்கள் (Short-Forms-Grammalogues) தொடர்ச்சொற்கள் (Phraseo graphy) , சுருக்கங்கள் (Contractions) வெட்டும்முறைகள் (Intersections) போன்றவற்றிற்கான குறியீடுகள் சந்தேகம் இன்றித் தெரிந்திருப்பின் பரீட்சையைச் சிறப்பாகச் செய்யலாம்;

ஆங்கிலமொழி மூலம் இப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் மிக வேகமாக எழுதுவதற்கு ஜியோபிரௌண் என்பவரால அறிமுகப்படுத்தப் பட்ட சுமார் 500 குறுக்கு வழிக்குறியீடுகளில் (Brown's Short Cuts) பரிச்சயம் இருந்தால் அவர்கள் வேகப் பரீட்சைக்கான குறியீடுகளை எவ்வித தடையுமின்றி எழுதலாம்.

மேற்பார்வையாளர் குறிப்பிட்ட 5நிமிடங்களில் வேகப் பந்தியை வாசித்து முடித்ததும், பரீட்சார்த்திகள் அக் குறியீடுகளை தமிழில் - ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க முன் பந்தியை இருமுறையாவது வாசித்துப் பார்க்க வேண்டும். அப்போது அப் பந்தியில் ஏதாவது குறியீடுகள் எழுதாதிருந்து அதற்காக இடைவெளி விட்டிருந்து அக்குறியீடுஎன்னவென ஞாபகத்தில் இருந்தால் அவற்றை எழுதலாம்; பரீட்சார்த்திகுறியீடுகளை எழுதும் போது ஏதாவது பிழையாக எழுதிவிட்டால் அதை எச்சந்தர்ப்பத்திலும் வெட்டவோ, அழிக்கவோ கூடாது, பிழையான குறியீட்டிற்கு மேல் ஒரு சிறு வட்டம் போடுவதே முறையானதாகும்;

குறிக்கப்பட்ட பந்தியை தமிழில்-ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதுவதற்காகச் சுமார் 50-57 நிமிடங்கள் கொடுக்கப்படும். சுருக்கெழுத்துக் குறியீடுகள் எழுதியதாளில் மொழி பெயர்த்து எழுதுவதனால் முன்பின் அடிக்கடி புரட்டும் போது நேரம் அதிகம் தேவைப்படும், இதன் காரணமாக குறியீடுகள் எழுதிய தாளை ஒரு கையில் வைத்துக் கொண்டு மறுகையால் வேறொரு தாளில் மொழி பெயர்த்தால் நேரம் சிக்கனமாகும்.

மொழி பெயர்க்கும் போது முற்றுப்புள்ளி, (Full Stop). அரைப்புள்ளி ( Comma ) போன்ற நிறுத்தற் குறியீடுகளைக் கட்டாயம் போட வேண்டும். சொற்களின் எழுத்துக்களையும் சரியாக எழுத வேண்டும். ஒரு சொல்லில் ஓர் எழுத்துப் பிழையாக இருந்தாலும் அச் சொல் பிழையானதாகவே கருதப்படும்; அத்துடன் பந்திகளைப் பிரித்து எழுதக்கூடிய தகைமை இருக்க வேண்டும்.

பந்தியை பூரணமாகமொழி பெயர்த்த பின்பு இரண்டு அல்லது மூன்று முறையாவது வாசித்துப் பார்த்து அதில் பிழைகள் இல்லை என்பதைப் பரீட்சார்த்தி நம்பிக்கை கொள்ள வேண்டும்;

சுருக்கெழுத்துக் குறியீடுகளை எழுதுவதற்கு மேற்கு ஜேர்மனியில் உற்பத்தி செய்யப்பட்ட Staedler Mars Lumograph 100 B என்ற பென்சிலை பாவிப்பது சிறந்த பயனை கொடுக்கும். சுருக்கெழுத்துக் குறியீடுகளைப் பென்சிலால் அல்லது பேனாவால் எழுதலாம் ஆனால்தமிழில் - ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் போது கட்டாயமாகப் பேனாவால்மட்டுமே எழுதவேண்டும்;

## தட்டச்சுப் பரீட்சை

இப் பரீட்சைக்கான குறைந்த வேகம் தமிழ், ஆங்கிலம் மொழிகளில் முறையே 20,30 சொற்கள். இதற்கெனத்தரப்படும் பந்தியைத் தொடர்ச்சியாக வினாத்தாளில் குறிப்பிட்ட நேரத்திற்குள் பொறிக்க வேண்டும்; மேற்பார்வையாளர் விடையளிப்பதற்கான தாள்களை வழங்கியவுடன் அவற்றில் இரண்டைத் தட்டச்சுப் பொறியில் இட்டு (ஒன்று தட்டச்சுப் பொறிப்பதற்காகவும் மற்றது தட்டச்சு உருளையைப்பாதிக்காது இருப்பதற்காகவும்) வினாத்தாளில் உள்ள அறிவுரையின் படி கட்டளையைப் பொறிக்க வேண்டும் அல்லது பேனாவால் எழுதவேண்டும்; பின்னர் வினாத்தாளில் உள்ள அறிவுரைகளைக்கவனமாக வாசிக்க வேண்டும்;

விடைத்தாளின் மேற்பக்கத்தில் ஒரு அங்குல இடைவெளியும், கீழ்ப்பக்கத்தில் அரை அங்குல இடைவெளியும் விடலாம்; எல்லையாக (Margin) இடது பக்கத்தில் 10 இடைவெளிகளும், வலது பக்கத்தில் 5 இடைவெளிகளும் விடலாம். பந்தியின் ஆரம்பத்தில் இடது பக்க எல்லையில் இருந்து 5இடைவெளிகள் விடலாம்;

அறிவுரைகளில் வரிகளுக்கிடையே எவ்வளவு இடைவெளி விடவேண்டும் எனக் கூறப்பட்டிருந்தால் அவ்வாறேசெய்ய வேண்டும். அல்லது சாதாரணமாக 1 1/2 இடைவெளிவிடலாம். பரீட்சார்த்தி தமது பொறியில் 1 1/2இடைவெளி ஒழுங்குபடுத்த முடியாத விடத்து ஒரு இடைவெளி விடலாம். வேகப் பரீட்சையைச் செய்யும் போது ஒரு எழுத்தையேனும் தவறவிடக்கூடாது; சொற்களை பொறிக்காது விட்டால் அல்லது மாறிப் பொறித்தால் புள்ளிகளை வீணாக இழக்க நேரிடும்;

இது ஓர் போட்டிப் பரீட்சை என்பதால் விரைவாகவும் அதேவேளை பிழைகள்இன்றி

(5ஆம் பக்கம் பார்க்க)

க. வ. சிவச்சந்திரதேவன்
சுருக்கெழுத்தாளர் (விசேட தரம்)
மக்கள் வங்கி,
பிரதேச தலைமைஅலுவலகம்
யாழ்ப்பாணம்

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப்டினன்ட் பொஸ்கோ**
(கணபதி சிறிரஞ்சன்)
துன்னாலை கிழக்கு, கரவெட்டி.

தாயின் மடியில்: 15-04-1969 தாயக மண்ணில்: 01-04-1991

திதி: 28-03 94

பருவத்தின் இராகம் இசைக்கின்ற கீதம்
போர்ப்பறையாக முழங்கிடக் கேட்டார்
விரவலர் மாழ விரிசுடர் ஆக
வியத்தகு சாதனை நீ படைத்தாய்
குருதிச் சேற்றினில் ஆடிய நிந்தன்
வீரத் தழும்புகள் அன்றொரு செய்தி
வருகின்ற நாளை தமிழரின் வாழ்வை
நெஞ்சினில் சுமந்த நீஒரு காவியம்.

(7850) குடும்பத்தினரும் நண்பர்களும்;

## கோழிவளர்ப்பு ஊக்குவிக்க பொ.மே. நிறு· நடவடிக்கை

சுயதொழில் முயற்சிகளை ஊக்குவித்து அதனூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கிலான கிளி - கோட்டத்திலுள்ள பாரதிபுரத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக்குழுப் பகுதியினால் 150 பயனாளிகளிற்கு தலா 20 கோழிக் குஞ்சுகள் வீதம்3000 குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு வழங்கப்பட்ட கோழிக் குஞ்சுகள் உரிய காலத்தில் மீளப்பெறப்பட்டு மேலும் 16 பயனாளிகட்கு வழங்கப்பட்டன. மேற்படி குஞ்சுகள் பாலநோயற்கும் தடுப்பூசி போடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது

## 31- நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு: 26 03 1936

இறப்பு: 27-02-1994

**கந்தையா மயில்வாகனம்**
உரிமையாளர் "அம்பாள் ஸ்ரோர்ஸ்"
பண்டத்தரிப்பு

எங்கள் குடும்பத் தலைவன் பண்டத்தரிப்பு "அம்பாள் ஸ்ரோர்ஸ்" உரிமையாளர் கந்தையா மயில்வாகனம் அவர்களின் அந்தியேட்டி 29-03-94 செவ்வாய்க்கிழமை அன்னாரது சில்லாலை இல்லத்தில் நடைபெறும். (தனிப்பட்ட அறிவித்தல் இல்லாதபடியால், வசதிகுறைவால் மரணவீட்டுக்கு வரமுடியாதவர்களும் அவரது வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவரையும் அந்தியேட்டியில் கட்டாயமாகப் பங்குபற்றும்படி அழைக்கின்றோம்.

சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு. ம. சிறீஸ்கந்தராசா மகன்

அன்னாரது சகோதரர்களும்.

(7859)

## சிறிலங்காவிற்கான உதவிகளை மீள்பரிசீலனை செய்ய கோரிக்கை

### முஸ்லிம் நாடுகளுக்கு அஷ்ரப் விடுத்தார்

(கொழும்பு)


சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் முஸ்லிம் நாடுகள் தமது முடிவை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச் எம். அஷ்ரப் கோரிக்கை விடுத்துள்ளார். அவர் உதவி வழங்கும் முஸ்லிம் நாடுகளுக்கு அனுப்பியுள்ள செய்தியில், இஸ்லாமிய மார்க்கத்திற்கும் முஸ்லிம் மக்களின் ஜனநாயக உரிமைக்கும் தற்பொழுது ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அண்மைய நோன்பு பெருநாள் பிறையை பொலநறுவை மாவட்டத்தில் ஒருவர் கண்டு உரிய முறையில் அதனை சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்த போதும் அதற்கு பல இடையூறுகள் விளைவிக்கப்பட்டதாகவும், இதனால், மார்க்க நடவடிக்கைகளுக்குப் பங்கம் ஏற்பட்டதாகவும் இனிமேலும் இது போன்ற நடவடிக்கை தொடருமாயின் அது முஸ்லிம் மார்க்கத்திற்கு எதிர்காலத்தில் ஓர் சவாலாக அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மற்றும் பிரதேச சபை தேர்தல்களின்போது முஸ்லிம்கள் வாழும் கிராமங்களில் தேர்தல் வன்முறை ஏற்பட்டதாகவும் இதனால் குறிப்பாக முஸ்லிம் வாக்காளர் தமது வாக்குகளை அளிக்க முடியாத நிலை ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், இந்த நடவடிக்கை முஸ்லிம் மக்களின் ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டமைக்கு நிகரான சம்பவம் என்றும் இந்த நடவடிக்கை தொடருமாயின் எதிர் காலத்தில் ஜனநாயக முறையில் முஸ்லிம் மக்கள் முற்றாக புறக்கணிக்கப்படுவார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே முஸ்லிம் மார்க்கத்திற்கும், மக்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டு வரும் சூழ்நிலையில் சிறிலங்காவுக்கு முஸ்லிம் நாடுகள் உதவி செய்வது என்பது மேலும் முஸ்லிம் மக்களை அரசாங்கம் ஒடுக்குவதற்கு கொடுக்கும் ஒத்துழைப்பாக தாமும் தமது கட்சியும் கருதுவதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## 3-ம் ஆண்டு இதயஞ்சலி



தாயின் மடியில்; 12-05-1970

தாயக விடிவில்; 28-03-1991

**வீரவேங்கை கசின்**

(கந்தசாமி சிவகுமார்)

விண்ணிலிருந்து தினம்
விடுதலையைப் பார்ப்பவனே
மண்ணிலிருந்து உன் இனம்
கொடுமையை கொளுத்தப் புறப்பட்டு விட்டனர்
இதயத்தை நாடும்
இதய இல்லங்களில் வாடகையின்றி
உறைபவன் நீ
இமயம் கூட உன் பணிக்காய்
வழியமைக்கும்;

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாணவர் அமைப்பைச் சேர்ந்த வேலாயுதம் ஜெயகாந்தன் (பன்னாலை) அவர்களுக்கும் எமது இதயஞ்சலிகள்.

சிவகுமார் வீதி, மாவடி; வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட்டை. உன் பாசத்தின் அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, உறவினர், நண்பர்கள்;

(7848)

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடாத்தும்

# உற்பத்தி எழுச்சி வாரம் - 1994

# உற்பத்தி எழுச்சி வாரம் - 1994

- உற்பத்திக்கு ஒரு விழா
- உற்பத்தித் திறனுக்கு உன்னத பரிசில்கள்
- உற்பத்தியாளருக்கு திருவிழா
- ஆண்டு தோறும் தொடர்வது இவ்வாண்டும் நிகழ்கிறது

## காலம்:- 1994 சித்திரை 24-ம் நாள் முதல் 30-ம் நாள் வரை

**விவசாயம்**

1 உழவுப்போட்டி
2 கொத்துதல் போட்டி (ஆண்/பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம்)
3 உபஉணவுப் பயிர்ச்செய்கைப் போட்டி (அவரையினம்/எண்ணெயினம்)
4 உற்பத்தி எழுச்சி வார பொது அறிவுப்போட்டி (மாணவர்/உழைப்போர்)

**விலங்கு வேளாண்மை தொழில் போட்டிகள்**

1 நல்லினக்காளை
2 நல்லினப் பசு
3 முயல் வளர்ப்பு
4 நல்லினக்கடா
5 நல்லின மறி
6 தாரா வளர்ப்பு

**கைத்தொழில்**

1 சிறு கைத்தொழில் போட்டிகள்

**சக்தியை பயன்படுத்தல்**

2 புதிய கண்டுபிடிப்புக்கள்

**பனை தென்னை வள அபிவிருத்தி தொடர்பான போட்டிகள்**

1 நீர் இறைக்கும் பட்டை இழைத்தல்
2 குட்டான் இழைத்தல்
3 கிடுகு பின்னுதல்
4 பனைமரம் ஏறுதல்
5 கூடிய பதநீர் உற்பத்தியாளர் தெரிவுப்போட்டி

**கடல்வளம் தொடர்பான போட்டிகள்**

1 நீச்சல் போட்டிகள்
2 பாய்மரம் கட்டுதல்
3 துடுப்பு வலித்தல்
4 வலை பின்னுதல்

**புதியவகை உணவு அறிமுகப் போட்டிகள்: கிராமிய பொதுசன அமைப்புகளுக்கிடையிலான போட்டிகள்**

1 வீதி திருத்துதல் 2 வாய்க்கால் திருத்தல் 3 குளம் புனரமைப்பு

**மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி**

மேற்படி விதிகளையும், விண்ணப்பப் படிவங்களையும் உங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

## விண்ணப்ப முடிவுத் திகதி:- 15.04.1994

விண்ணப்பப் படிவங்களை உங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களிடமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மாவட்ட, கோட்ட, வட்டப் பணிமனையிலும் ஒப்படைக்கலாம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(இ- 8989)

சிந்தனைக்கு

அரசியல் ஒரு நிரந்தர அவசரகால நெருக்கடி

- ர. சி. ஃப்லிகினர்கிரொடெர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28-03-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

## முன்னேற்றம் தான் ஆனால் பயன் கிட்டுமா?

தென் மாகாணசபையில் பொதுஜன ஐக்கிய முன்னணியினருக்குக் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகாகுமாரணதுங்க இனப் பிரச்சினை தொடர்பாக சற்று விரிவாகவும், ஓரளவுதெளிவாகவும் பேசியுள்ளார். இனப்பிரச்சினை விவகாரத்தில் சந்திரிகா குமாரணதுங்க வெளிப்படையாக இவ்வாறு பேசியுள்ளமை இதுவே முதற்தடவை என்று கூடக் கூறலாம்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் சந்திரிகா குமாரணதுங்கா கூறுவதுபோல் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிலைப்பாடு இருக்குமானால் ஒப்பீட்டு ரீதியில் அது முன்னேற்றகரமானது என்பதில் சந்தேகமில்லை. அத்தோடு சந்திரிகாவின் இவ்வறிவிப்பானது இதய சுத்தியுடன் கூடிய அறிவிப்பாக இருக்குமானால், இனப்பிரச்சினை விவகாரத்தில் அவரால் கணிசமான தூரம் முன்னேறவும் முடியும் என்று கூறுவதிலும் தவறில்லை.

பி. பி. ஸிக்கு சந்திரிகா குமாரணதுங்கா வழங்கிய பேட்டியில், இனப்பிரச்சினை விவகாரத்தில் சில முக்கியமான விடயங்களில் தெளிவான கொள்கை வெளியிட்டுள்ளார். இதில் வடக்கு - கிழக்கில் பயங்கரவாதப் பிரச்சினையல்ல இனப்பிரச்சினையே உள்ளது என ஏற்றுக் கொண்டுள்ளமையானது மிகவும் முக்கியமானதொரு அறிவிப்பாகவும்.

இவ்வறிவிப்பானது இனப்பிரச்சினை விடயத்தை சந்திரிகா குமாரணதுங்காவோ அன்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரோ அணுகுவதற்குப் பெரும் உதவியாக இருக்கக்கூடியதாகும். எதிர்த்தரப்பு பிரச்சினையை விளங்கிக்கொள்வதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் இது அவசியமானதாகும். சுமார் 45 வருடங்களுக்குமேலாக இருந்து வரும் ஒரு பிரச்சினையை தூக்கத்திலிருந்து திடீரென விழித்தாற்போல் இது இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதப் பிரச்சினை எனக் கூறினால் இனப் பிரச்சினை பயங்கரவாதப் பிரச்சினையாகிவிடமுடியுமா?

அடுத்ததாக இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமாகப் போவதில்லை என்ற சந்திரிகா குமாரணதுங்காவின் நிலைப்பாடு முக்கியத்துவமானதாகும். இதனைச் சந்திரிகா உலக வரலாற்றை அறிந்துகொண்டதன் மூலம் கூறுகின்றாரா? அல்லது இலங்கையின் கடந்த இரு தசாப்த அரசியல் வரலாற்றை அவதானித்ததன்

# சொந்தமண்மீதுபற்றுள்ளவர் துணைவேந்தர் துரைராசா

## இளங்குமரன் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

துணைவேந்தர் தன் மண் மீது வைத்த பற்றினாலேயே இவருக்கு தமிழீழ மக்கள் இன்று விழாக்களை எடுத்த வண்ணமுள்ளனர்.

இவ்வாறு நேற்று முன்தினம் மாலை யாழ் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவிற்கு நடைபெற்ற பிரிவுபசார விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு இளங்குமரன் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் இன்று துணைவேந்தருக்கு எடுக்கும் இவ் விழாவானது தமிழீழமே நன்றியுணர்வுடன் எடுக்கும் ஒரு விழாவாகும். எமது தமிழீழ மண் இத்தனை ஆற்றல்மிக்க அறிஞரைத் தந்து தலை நிமிர்ந்து நிற்கிறது. இவர் மக்கள் படுகின்ற இன்னல்களில் தானும் பங்கு கொள்ளவேண்டும் என்ற உள்ளம் கொண்டவர். அதனாலேயே இன்று வரை தமிழீழ மக்களும் ஏனையோரும் பயன்படுத்தும் பாதையூடாக தானும் பயணம் செய்யவேண்டும் என்று பயணம் செய்து வருகின்றார்.

இப்படிப்பட்ட உயரிய இலட்சியம் கொண்ட எமது துணைவேந்தர் மாற்றலாகிச் சென்றாலும் மீண்டும் தமிழீழம் திரும்பி தமிழீழத்தில் தமது பணியைத் தொடர வேண்டும் என்றார்.

இப்பிரிவுபசார விழாவில் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் மகேஸ்வரன், பதிவாளர் பரமேஸ்வரன்பண்டிதைதங்கம்மாஅப்பாக்குட்டி மற்றும் மாணவர் சார்பில் திரு ரவீந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

# சூழல் சுத்தம் பேணாவிடில் மலேரியாவில் இருந்து தப்ப முடியாது

## பிரதேச செயலர் சிவசாமி

(வடமராட்சி)

எமது சுற்றுப்புறச் சூழலை நாம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இல்லையேல் மலேரியா நோயிலிருந்து விடுபடுவது கடினம். வடமராட்சியிலேயே கூடுதலானோர் மலேரியாவுக்கு இலக்காகியுள்ளனர்.

இவ்வாறு பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசாமி புலோலி மத்தி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் நிலையத் தலைவர் திரு ஆ.துரைசிங்கம் தலைமையில் கடந்த வெள்ளி இரவு நடைபெற்ற மலேரியா தடுப்பு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கும்போது, மலேரியா நோய் தற்போது அதிகரித்திருக்கிறது. அதுவும் வடமராட்சியில் இந் நோய்க்கு அதிகமானோர் இலக்காகி இருப்பதை காணமுடிகிறது. வடமராட்சியில் மட்டும் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இந் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

1834ஆம் ஆண்டில் இந் நோயினால் எண்பதினாயிரம் பேர் பீடிக்கப்பட்டிருந்தது ஒரு புள்ளி விபரம் மூலம் அறியமுடிந்தது. அதற்குப் பின்னர் தற்போது இந் நோய் பலரைப் பீடித்திருக்கிறது. இந் நோயிலிருந்து நாம் எல்லோரும் விடுபட வேண்டுமேயானால் நிச்சயமாக சுகாதார முறைகளைக் கடைப்பிடித்தே ஆகவேண்டும்.

நாம் எமது வதிவிடத்தையும் சுற்றுப்புறச் சூழலையும் துப்புரவாக வைத்திருக்க வேண்டும். வீடுகளிலோ, வெளியிடங்களிலோ தண்ணீர் தேங்க விடாமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். தகரங்களில், சிரட்டைகளில் தண்ணீர் தேங்குவது மலேரியா கிருமிகள் உற்பத்திக்கான காரணியாகும்.

மலேரியா பரவுவதற்கு அனோபிலிஸ் என்ற பெண் நுளம்புதான் மூலகாரணம். ஆகவே நுளம்பு உற்பத்தி செய்ய அனுமதிக்காமல் குப்பை கூளங்களை அகற்ற வேண்டும், அல்லது எரிக்க வேண்டும். நாங்கள் எல்லோரும் சுகாதாரத்தை ஒழுங்காக கடைப்பிடிப்போமேயானால் இந் நோயில் இருந்து இலகுவில் விடுபட முடியும். எங்கள் பகுதியில் கிராம அலுவலரைத் தலைமையாகக் கொண்டு சுகாதாரக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்களை நாடி நீங்கள் இதற்கான வேண்டிய ஆலோசனைகளை பெறலாம் என்றார்.

தொடர்ந்து புலோலி மத்தி கிராம அலுவலர் திரு. கே சண்முகநாதன் சுகாதாரப் பரிசோதகர் திரு. செல்லையா ஆகியோரும் இந் நோய் பற்றியும் நோயில் இருந்து விடுபடுவது பற்றியும் விபரித்தனர்.

அதேசமயம் இவ்வாறான கருத்தரங்குகள் கிராம மட்டத்திலும், பாடசாலை மட்டத்திலும் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசாமி தலைமையில் தினமும் நடைபெற்று வருகின்றது.

(யோ)

# யாழ். பாடசாலைகளுக்கிடையிலான உடற் பயிற்சிப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இந்திய பாகிஸ்தான்

# சர்ச்சையை தீர்க்க அமெரிக்கா நடவடிக்கை

(வாசிங்டன்)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சர்ச்சைகளைத் தீர்த்து இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை வலுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இதுதொடர்பாக அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் ஸ்ட்ரோலே டல்போட் விரைவில் இரு நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

அமெரிக்க ராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் மைக் மக்கரி இது பற்றி மேலும் கூறுகையில், அடுத்த 5-ம் திகதிக்கும் 13-ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் ஸ்ட்ரோலே டல்போட் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்ய இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

புதுடில்லிக்கான அமெரிக்கத் தூதுவர் பதவி கிளிங்டன் நிர்வாகத்தால் நிரப்பப்படவில்லை என்பதும், காஷ்மீர் விவகாரம் தொடர்பான கிளிண்டன்நிர்வாகத்தின்போக்கே இதற்குக் காரணம் என்பதும் இதனால் அமெரிக்க - இந்திய உறவில் விரிசல் ஏற்பட்டிருப்பதும் தெரிந்ததே.

பாதுகாப்பு செயலர் பதவியை தற்போது வகிக்கும் பிராங் விஸ்னர் புதுடில்லிக்கான அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்படலாமெனவும், டல்போர்ட்டின் புதுடில்லி விஜயம் முக்கியமானதாக கருதப்படும் எனவும் இரு நாடுகளுக்குமிடையிலான பதட்டநிலையை தவிர்த்து இந்தியாவுடனும், பாகிஸ்தானுடனும் அமெரிக்கா நல்லுறவை வளர்க்க டல்போர்ட்டின் விஜயம் உதவும் எனவும் மேலும் கூறப்படுகிறது.

# கிளிண்டன் சொத்து விபரம்

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டனின் 1977 முதல் 1979ம் ஆண்டுவரைக்குமான வரிவிபரங்களை வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது.

வைற் வோட்ட விவகாரம் காரணமாக சட்டபூர்வமற்ற விதத்தில் கிளிண்டன் தம்பதிகள் பணத்தைத் திரட்டியுள்ளனர் என்பதற்கு மறுப்பு தெரிவிப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாம்.

வரிக்கோவைகள் பத்திரிகையாளர்களுக்கு நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டன. வைற் வோட்ட நிறுவனத்தின் மூலதனம் காரணமாக தவறான நிதியை தாம் பெற்றிருக்கவில்லை என்பதை இந்த பத்திரங்கள் நிரூபிக்கும் என்று ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

# வி. ஓ. ஏ புதிய இயக்குநர்

(வாஷிங்டன்)

வொய்ஸ் ஒப் அமெரிக்கா வானொலியின் புதிய இயக்குனராக சட்டத்தரணியும் எழுத்தாளருமாகிய ஜியோவ்றி கௌளைன ஜனாதிபதி பில்கிளிண்டன்நியமித்துள்ளார் இரண்டாம் உலகப் போர் காலத்தில் இதே பதவியை இவரின் தந்தை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

கௌன் வொய்ஸ் ஒப் அமெரிக்காவின் 19ஆவது இயக்குனராவார் இவரது தந்தை இரண்டாவது இயக்குனராக இருந்தார்

# கொரியா சோதனைக்கு அனுமதிக்க வேண்டும்

வடகொரியா அதன் அணு உலைகளைப் பார்வையிட அனுமதிக்க வேண்டுமெனக் கோரும் ஐ. நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானமொன்றை அமெரிக்கா தயாரித்துள்ளது.

அமெரிக்க ஐ. நா. தூதுவரான மெடலின் அல்பிறைட் இத்தகவலை வெளியிட்டார் எனினும் பொருளாதாரத் தடைகள் பற்றி இத் தீர்மானங்கலில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

வடகொரியாவில் உள்ள அணு உலைகள் எல்லாவற்

பாதுகாப்பு சபையின் ஏனைய உறுப்பினர்களுடன் இணைந்து இத் தீர்மானம் ஆராயப்படுமென மெடலின் மேலும் தெரிவித்தார்.

# மாலைதீவு இருக்குமா?

2000-ம் ஆண்டில் மாலை தீவு என்று ஒன்று இருக்குமா என்பது சந்தேகம்என மாலை தீவு ஜனாதிபதி அப்துல்கயூம் தெரிவித்துள்ளார். இந்துசமுத்திர நீர்மட்டம் உயர்வதாலும், மண்ணரிப்பினாலும்

மூலம் கூறுகின்றாரா? அல்லது இலங்கையின் கடந்த இரு தசாப்த அரசியல் வரலாற்றை அவதானித்ததன் அடிப்படையில் கூறுகின்றாரா எனத் தெரியவில்லை. ஆனால் ஒரு தேசிய இனத்தின் பிரச்சினையை இராணுவத்தால் தீர்க்கப்படமுடியாது என்பதை அவர் தெளிவாக உணர்ந்துள்ளார் என்பது மட்டும் தெரிகின்றது;

அடுத்ததாக தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வே இனப்பிரச்சினைக்குத் தீர்வு கொண்டுவரும் என்பதாகும்; சந்திரிகாவின் இக்கூற்றும் அரசியலில் அவர் சரியான கணிப்பீட்டைக் கொண்டிருப்பதாகவே தெரிகின்றது அதாவது பிரச்சினைக்குரிய தீர்வை பிரச்சினைக்குரிய மக்களே ஏற்கவேண்டுமே ஒழிய ஏனையவர்களின் விருப்பங்கள் பிரச்சினையைத் தீர்க்கப் போவதில்லை

சந்திரிகா குமாரணதுங்காவின் இவ் அரசியல் நிலைப்பாடானது நோக்கம் எதுவாக இருப்பினும் கடந்த கால அரசியற் தலைவர்களின் அறிவிப்புக்களில் இருந்து வேறுபட்டதாகவும் முன்னேற்றமானதுமாகும். ஆனால் சந்திரிகா குமாரணதுங்காவும், முன்னைய சிங்களத் தலைவர்களைப் போன்றே நடந்து கொள்வாரா? அன்றி தனது அறிவிப்புக்களுக்கு ஏற்ப நடந்துகொள்வாரா? என்பதற்குக் காலந்தான் பதில் சொல்லவேண்டும்;

தென்மாகாணசபைமக்களில் அநேகர் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமாகப்போவதில்லை, அரசியற் தீர்வே சாத்தியமானது என அபிப்பிராயத்தை தேர்தல்மூலம்வெளியிட்டிருக்கலாம். ஆனால் சிறிலங்கா அரசியல் வரலாற்றைப் பார்க்கும்போது அது அத்துணை சுலபமாக அமையும் என்று கூறிவிடமுடியாது. இவ்விடயத்தில் எதிர்ப்புக்கள் எங்கிருந்து எப்படிவரும் என்றும் கூறிவிடமுடியாது.

இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காணும் முயற்சியில் முன்னர் ஒரு தடவை சுதந்திரக்கட்சி தோற்றுப் போனது; தானே தமிழருடன் செய்துகொண்ட உடன்பாட்டை - பண்டா - செல்வா உடன்பாடு - கிழித்தெறிந்தது, பின்னர் எதிரணியைவிட இனவாதத்தை தானே தூக்கிப் பிடித்துக்கொண்டது;

ஆனால் அன்றிருந்த அரசியல், இராணுவ சூழ்நிலை இன்றில்லை. அன்று இருந்த அடக்கி ஆளலாம் என்ற சிந்தனையும் இன்று நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை; இந்நிலையில் இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி சந்திரிகாவும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினரும் எந்தளவு தூரம் செல்வார்கள் என்பதற்கும், இவர்கள் தமது இக்கருத்திற்கு செயலுருவம் கொடுக்கத் தேவையான ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவார்களா என்பதற்கும் இன்னும் சிறிது காலம் பொறுத்திருந்தேயாக வேண்டும்;

# உடற் பயிற்சிப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது'

இப்போட்டிகள் 15 வயது ஆண்கள் பெண்கள் 17வயது ஆண்கள், பெண்கள் 19வயது ஆண்கள் பெண்கள் அணிகளுக்கு தனித்தனியே நடாத்தப்பட்டது

15 வயது ஆண்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில்இமையாணன்அ த க பா. முதலாம் இடத்தையும் புனித ஹென்றியரசர் கல்லூரிஇரண்டாம் இடத்தையும்கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் சுதுமலை சின்மயபாரதி நான்காம் இடத்தையும் சந்திரபுர ஸ்கந்தவரோதய வித்தியாலயம் ஐந்தாம் இடத்தையும் பெற்றன.

பதினைந்து வயதுக்கிடைப்பட்ட பெண்களுக்கான போட்டியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும் வேம்படி மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும் யாழ்இந்துமகளிர்கல்லூரிமூன்றாம்இடத்தையும்வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி நான்காம் இடத்தையும்சேர் வைத்திலிங்கம் மத்திய மகாவித்தியாலயம் ஐந்தாம் இடத்தையும் பெற்றன,

17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி முதலாம் இடத்தையும் சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் வைத்தீஸ்வரா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் சென் ஜோசெப் வித்தியாலயம்நான்காம் இடத்தையும் ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் வித்தியாலயம் ஐந்தாம் இடத்தையும் பெற்றன.

17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும்வடமராட்சி மத்தியமகளிர்கல்லூரிஇரண்டாம் இடத்தையும் அச்சுவேலி மத்திய மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் திருக்குடும்ப கன்னியர்மடம் நான்காம் இடத்தையும் உடுப்பிட்டி மத்திய கல்லூரி ஐந்தாம் இடத்தையும் பெற்றன.

19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும் வைத்தீஸ்வரா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் டிறிபேக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் கொக்குவில் இந்துக் கல்லூரி நான்காம் இடத்தையும், அராலி இந்துக் கல்லூரி ஐந்தாம் இடத்தையும் பெற்றன.

19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தையும். யாழ். இந்து மகளிர் கல்லூரி நான்காம் இடத்தையும் திருக்குடும்ப கன்னியர் மடம் ஐந்தாம் இடத்தையும் பெற்றன.

இப்போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ள அணிகளுக்கு வெற்றிக் கேடயங்கள் வழங்கப்பட்டன. 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற இமையாணன் அ த.க.பாடசாலைக்கு லெப். கேணல் சாள்ஸ் நினைவு வெற்றிக் கேடயமும் 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கானபோட்டியில் 1-ம் இடத்தைப் பெற்ற உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு லெப் கேணல் பாமா நினைவு வெற்றிக் கேடயமும் 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு கப்டன் பண்டிதர் நினைவு வெற்றிக் கேடயமும் 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை பெற்ற வேம்படி மகளிர் கல்லூரிக்கு மேஜர்சோதியாநினைவுவெற்றிக்கேடயமும் 19வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்தியமகாவித்தியாலயத்திற்கு லெப். சங்கர் நினைவு வெற்றிக்கேடயமும் 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற வேம்படி மகளிர் கல்லூரிக்கு 2ஆம் லெப் மாலதிநினைவு வெற்றிக்கேடயமும் வழங்கப்பட்டது

## மாத்தளையில் 9 பேர் கைது

(கொழும்பு)

வெளி மாவட்டங்களிலிருந்து வந்து மாத்தளையில் தமது உறவினர்களுடன் தங்கியிருந்த ஒன்பது பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிசாருக்கு அறிவிக்காமல் இவர்களைத் தமது வீடுகளில் தங்க வைத்திருந்தமைக்காக வீட்டுச் சொந்தக்காரர்கள் மீது வழக்குத் தொடரப் போவதாகவும் மாத்தளைப் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

## பச்சிலைப்பள்ளிக்கு நிதி ஒதுக்கீடு

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு 1994-ம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான மூலதன வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா- 3,90,000- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான வேலைகளை செய்து முடிப்பதற்குப் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை நடவடிக்கையினை மேற்கொண்டுவருகின்றது (86)

வடகொரியாவில் உள்ள அணு உலைகள் எல்லாவற்றையும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் பார்வையிட அனுமதிக்க வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தி வருவது தெரிந்ததே?

...துள்ளார். இந்துசமுத்திர நீர்மட்டம் உயர்வதாலும், மண்ணரிப்பினாலும் தாழ்நிலப் பகுதியைக் கொண்ட மாலைதீவு தொடர்ந்து நீடிக்குமா என்பது சந்தேகமே என ஜனாதிபதியும் தெரிவித்தார்

## யாழ்ப்பாண

யும் ஒழுங்காகப் பொறிப்பவர்கள் கூடிய புள்ளிகளைப் பெறலாம். முற்றுப் புள்ளி, கேள்விக்குறி, ஆச்சரியக்குறி ஆகியவற்றின் பின் இரு இடைவெளிகள் விடவேண்டும். தவறுதலாக ஒரு இடைவெளி விட்டால், இதுவும் பிழைகளில் ஒன்றாகவே கணிக்கப்படும். வசனங்களைப்பிரித்துப் பொறிப்பதை கூடியவரையில் தவிர்ப்பது பரீட்சார்த்திகளுக்கு நன்மை தரக்கூடியது: எனினும் பிரித்துப் பொறிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

உச்சரிப்புக்கேற்ற முறையில், ஆங்கிலத்தில்- ing போன்றவற்றிற்கு முன்பு ஆங்கிலத்தில் ஒரு சொல்லில் ஒரே எழுத்து அடுத்தடுத்து இருமுறை வந்தால் அவற்றின் மத்தியில் (Sap-phire), தொடர்ச் சொற்கள் மத்தியில். பின்வரும் சந்தர்ப்பங்களில்சொற்களைப் பிரிக்கக் கூடாது:

ஒரு வசனத்தின் இறுதியில் இரு எழுத்துக்கள் இருக்கும் போது. ஒரு சிறிய சொல், அங்கீகரிக்கப்பட்ட சுருக்கங்கள், பெயர்ச் சொற்கள். இலக்கங்களும் பணத்தொகையும் பக்கத்தின் அல்லது பக்கத்தின் கடைசிச்சொல்;

தமிழ்மொழி மூலமான தட்டெழுத்துப்பொறித்தலில் எச்சந்தர்ப்பத்திலும் வரிஆரம்பத்தில் ம், ன், ஞ் போன்ற மெய் எழுத்துக்கள் வரலாகாது;

விரைவுப் பரீட்சையைச் செய்து கொண்டிருக்கும் போது ஏதாவது பிழை ஏற்படின் அதனைத் திருத்த முயற்சிக்கக் கூடாது திருத்தப்பட்டால் அதற்கு எந்த விதப் புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது; ஆனால் பரீட்சார்த்தியின் பிழையான செயலுக்காக புள்ளிகளைத் தண்டமாக இழக்க நேரிடும்.

வினாத்தாளில் "கொடுக்கப்பட்ட பந்தியை வினாத்தாளில் குறிப்பிட்ட நேரத்திற்குள் நீர் பொறித்து முடித்தால் அதை மீண்டும் பொறிக்குக" எனக் கூறப்பட்டிருக்கும் மீண்டும் பொறிக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படின் அதே பக்கத்திலேயே தொடர்ந்து பொறிக்க வேண்டும். அதே பக்கத்தில் இடம் இல்லாவிடின் அதே தாளில் மறு பக்கத்தில் பொறிக்க வேண்டும் எச்சந்தர்ப்பத்திலும் வேறு தாளில் பொறிக்கக் கூடாது. அப்போது முதல் பக்கத்தில் விட்ட எல்லை போல அல்லாது இடது பக்கத்தில் 5 இடைவெளிகளும் வலது பக்கத்தில் 10 இடைவெளிகளும் விடவேண்டும்; இதனைப் பரீட்சார்த்திகள் நன்கு கவனிக்க வேண்டும்.

இப் பரீட்சைகளுக்குத் தயார் செய்யும் பரீட்சார்த்திகள் தினமும் சுருக்கெழுத்துப் பயிற்சியிலும், தட்டெழுத்தைச் சிறந்த பொறிகளிலும் பயிற்சி செய்யவேண்டும் அத்துடன் பயிற்சி செய்யும்பொறியையே பரீட்சைக்கும் பாவிப்பது மிகுந்த பயனைக் கொடுக்கும். மேற்குறித்த பரீட்சைகள் சுருக்கெழுத்தாளர் பதவிகளுக்கே என்பதால் இரு வினாத்தாள்களிலும் சித்தியடைந்து சராசரியாகக் கூடுதலான புள்ளிகளைப் பெறுபவர்களுக்கே தொழில் வாய்ப்புக் கிடைக்கும் என்பதனைப் பரீட்சார்த்திகள் மனதில் கொள்ளவேண்டும்.

# தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட அமைப்பா?

## ஆதாரத்தைக் காட்டுமாறு கேட்கிறார் நீதிபதி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு தடை செய்யப்பட்ட இயக்கமா எனவும் அதற்கான ஆதாரத்தைக் காட்டுமாறும் மேல்நீதிமன்ற நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் அரச சட்டவாதியிடம் கேள்வி எழுப்பினார்.

இச் சம்பவம் கடந்த புதன் அன்று நடைபெற்றது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் உணவுப்பொருள்கள் வழங்கியதாக 21) (உ) பிரிவின் கீழ் தொடரப்பட்ட வழக்கு ஒன்று நீதிபதி முன்னிலையில் எடுக்கப்பட்டது. இந்தப் பிரிவின் கீழ் வார்த்தைகளால் அல்லது பார்வையால் பார்க்கக்கூடிய அல்லது சைகை மூலம் செய்யக்கூடிய அல்லது செய்ய முற்படும் செயல்கள் இன ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படுத்தும் குற்றங்கள் எனக் கூறப்பட்டுள்ளது. இதில் சட்டவிரோத செயல்கள் என்ற முறையில் அனைத்து குற்றச்சாட்டுகளையும் புகுத்த முற்படுவது சட்டவிரோதமாகும்.

ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டுமே தடயப்பொருளாகக் கொண்டுள்ள இவ் வழக்கை எவ்வாறு நிரூபிக்கப் போகி

நீர் என கேள்வி எழுப்பிய நீதிபதி மேலும் குறிப்பிடுகையில் 1979 ஆம் ஆண்டில் பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்ட போது இச் சட்டத்தில் 30 ஆம் பிரிவில் விடுதலைப் புலிகளையும் அது போன்ற இயக்கங்களையும் தடை செய்யும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டம் நீக்கப்படுகிறது என உள்ளது.

1983 இல் ஜே. வி. பியும் நவசமசமாஜக் கட்சியுமே தடைவிதிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டன. அரசு புலிகள் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றுள்ளன.

ஆனால் இன்றுவரை புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டதாக எடுத்துக்கூறும் ஆவணம் எதுவும் என்முன் இல்லை.

தடை நீக்கப்பட்டிருக்கும் புலிகள் இயக்கத்திற்கு உணவு வழங்கியதாக எப்படி குற்றஞ்சாட்ட முடியும் என நீதிபதி மேலும் கேள்விஎழுப்பினார்.

# சாதாரண சூழலில் தேர்தல் நடந்தால் ஐ. தே. க. அரசை அகற்ற முடியும்

– சிறிமாவோ பண்டாரநாயக்கா

(கொழும்பு)

சாதாரண சூழ்நிலையில் பொதுத்தேர்தல் நடைபெறுமானால் இந்த ஆட்சியை மக்கள் அகற்ற முடியும் என்பதை தென்மாகாணசபை தேர்தல்கள் உணர்த்தி இருப்பதாக எதிர்க்கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

'லங்கா தீப' வார இதழுக்கு அளித்த செவ்வியின் போதே இதனை அவர் தெரிவித்தார். பல அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தனது கடமையை சரிவரச் செய்த தேர்தல் ஆணையாளருக்கும் அவரின் உத்தியோகத்தர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் அதே வேளை தென்மாகாண சபை மக்கள் நாட்டின் ஜனநாயகத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கு மேற்கொண்ட சகல முயற்சிகளுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# தென் மாகாண மக்களுக்கு தொடங்கொட பாராட்டு

(கொழும்பு)

குண்டர்களின் கொலை மிரட்டலுக்கு முன்னே பிரதப்பெட்டியை முத்தமிடத் தயாரானநிலையிலும் பொது மக்கள் வாக்குப்பெட்டியைக் காக்க முன்வந்தமை மிகவும் பாராட்டத்தக்க விடயமென அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இதற்கு தென் மாகாண மக்களுக்கு தான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளதாகவும், தான் இன்னும் சில தென்மாகாணசபை

தினங்களில் முதலமைச்சராக பதவியேற்க இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அரசியலை வேலியாகவும் வன்முறைகள், பலாத்காரம் என்பவற்றினால் நடத்தமுடியும் என நினைத்தவர்களுக்கு மக்கள் சரியான தீர்ப்பு வழங்கியதாகவும், விமால் பிரான்ஸிஸ்கோவுக்கு அம்பாந்தோட்டை மாவட்ட மக்கள் நம்பிக்கை மோசடிக்குச் சரியான பதிலை அளித்துள்ளனர் என்றார்.

# லொறி மீது ஹெலிதாக்கு

(வடமராட்சி)

புத்தூர் பிரதான வீதியில் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றின் மீது உலங்குவானூர்தி ஒன்று நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் பலத்த துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. தொடர்ச்சியான முறையில் லொறிமீது தாக்குதல் நடைபெற்றபோதிலும் சேதவிபரங்கள் ஏற்பட்டதாக தகவலில்லை. (யோ)

# திருடச்சென்ற முன்னாள் சிப்பாய் பொலிஸ் அதிகாரியால் கொலை

(கொழும்பு)

இராணுவத்தை விட்டுத் தப்பியோடிய நபர் ஒருவர் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரின் வீட்டில் திருட முயன்றபோது அப் பொலிஸ் அதிகாரியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து இவ்வதிகாரியின் வீடு கொல்லப்பட்டவரின் சகாக்களால் அடித்து நொருக்கப்பட்டது. இச் சம்பவம் கவகமுக பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது கடந்த வியாழனன்று இரவு இப் பகுதியில் உள்ள மேற்படி பொலிஸ் இன்ஸ்பெக்டர் வீட்டில் இராணுவத்தை விட்டு ஓடிய நபர் திருடும் நோக்கில் வீட்டினுள் நுழைவதற்கு முயற்சித்தார். அப்போது எழுந்த ஒலியைக் கேட்டு விழிப்படைந்த பொலிஸ் அதிகாரி தனது துப்பாக்கியினால் சத்தம் வந்த பகுதியை நோக்கி வேட்டுக்களைத்தீர்த்தார். இதைத் தொடர்ந்து திருடவந்த அந் நபர் தப்பியோடி விட்டார்.

எனினும் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த அந்த நபர் மூன்று தினங்களின்பின் பிணமாக வீட்டிலிருந்து 200 யார் தொலைவில் காட்டினுள் சடலமாக பொலிசாரால் மீட்கப்பட்டார். இச் சிப்பாயின் மரண ஊர்வலம் பின்னர் நடந்தபோது இவரது உறவினர்கள் பிரேதப் பெட்டியை இந்த பொலிஸ் அதிகாரியின் வீட்டில் வைக்க முயன்றதாகவும் அவரதுவீட்டு யன்னல்களை அடித்து நொருக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து இப் பகுதிக்கு வந்த பொலிசார் அக் கூட்டத்தினரை விரட்டியடித்தனர். இச் சம்பவத்தின்போது அப்பொலிஸ் அதிகாரி வீட்டில் இருக்கவில்லை.

இராணுவத்தை விட்டு தப்பியோடிய இந்த நபர் ஜே.வி.பி காலத்தில் அவர்களுக்கு எதிராக செயற்பட்ட மேற்படி சப் இன்ஸ்பெக்டரின் வீட்டிற்குள் நுழைய முயன்றதற்கு ஏதோ ஓர் காரணம் இருக்க வேண்டும் என இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் தெரிவித்தார்.

# போலி ஏஜென்சியிடம் 14 இளைஞர் ஏமாந்தனர்

(கொழும்பு)

டுபாயில் வேலைபெற்றுத் தருவதாகக் கூறி 14 தமிழ் இளைஞர்களிடம் மூன்றரை லட்சம் ரூபாவைப் பெற்றுக் கொண்டு நபர் ஒருவர் தலைமறைவாகிவிட்டார்.

கொழும்பு முகத்துவாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை விடுதி ஒன்றில் அடிக்கடி தங்கியிருந்தவருமான இந்நபர் தாம் இரத்தினக்கல் வியாபாரி என்றே அறிமுகம் செய்துகொண்டார்.

இந்த 14 தமிழ் இளைஞர்களிடமும் விசா வந்துவிட்டதாகக் கூறி போலி ஆவணங்களைக் காண்பித்து வைத்திய பரிசோதனைக்கும் பணம்பெற்றுக்கொண்ட இந் நபர் இப்போது தலைமறைவாகிவிட்டார்.

# அமைச்சர்கள் தெரிவு குறித்து பேச்சுவார்த்தை

தென்மாகாண சபையின் அமைச்சரவையைத் தெரிவு செய்யும் பொருட்டு பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருவதாக தெரியவருகின்றது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆகக்கூடிய விருப்பு தெரிவு வாக்கினைப் பெற்ற நிருஜுமார ராஜபக்சவுக்கும், மாத்தறை மாவட்டத்தில் ஆகக் கூடிய விருப்பு தெரிவு வாக்குகளைப் பெற்ற அலஸ் அழககோனுக்கும் மாகாண அமைச்சர் பதவிகளை வழங்குவது என உறுதி செய்யப்பட்டபோதும் மேலும் இரு அமைச்சு தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது. இதேவேளை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தெரிவான வீ. கே. தர்மசேன, காலி மாவட்டத்தில் தெரிவான அப்துல் சமாதிற்கு அமைச்சு பதவிகளை வழங்க பொதுஜன முன்னணி தீர்மானித்து இருப்பதாக அதன் பொதுச் செயலாளர் டி.மு ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

# தெற்கில் பாதுகாப்பு நீடிக்குமாம்

(கொழும்பு)

தென்மாகாணத்தில் மேலும் சில நாட்களுக்கு பொலிசாரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் நீடிக்கும் என பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# மட்டு. அரச அதிபரின் இடமாற்றம் ஒத்திவைப்பு

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் இ. மோனகுருசாமியின் இடமாற்ற உத்தரவு பிற்போடப்பட்டுள்ளதாக மாகாணசபைகள் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலும் சிறிது காலத்திற்கு அவர் அரச அதிபராக பணிபுரிவார் எனக் குறிப்பிட்ட அவர் இடமாற்றம் பிற்போடப்பட்டதற்கான காரணத்தை தெரிவிக்கவில்லை.

அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் நடைபெற்ற அத்துமீறல்கள் குறித்து மட்டக்களப்பு அரச அதிபர் விசாரணைகளை நடத்தியதையடுத்து இவர் முன்னதாக பொது நிர்வாகத்துறை அமைச்சிற்கு இடமாற்றம் செய்யப்படவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தாக்குதல்

...டி விசாரணையை மேற்கொள்ளுமாறு மட்டக்களப்பு எம். பி. ஒருவர் மட்டக்களப்பு மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் லோகான் ஆர். குணவர்தனவிடம் கேட்டுள்ளார்.

கடந்த புதனன்று பழுகாமத்தில் இராணுவ ஜீப் மீது கைக்குண்டு வீசப்பட்டது. இதைத் தொடர்ந்து பழுகாமம் முதலைகுடா பிரிவு வீரசேனை வன்னிநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 80 பொதுமக்கள் வீடுகளிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு படையினரால் தாக்கப்பட்டனர்.

# வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு சமாதான தீர்வே காணவேண்டும்

## வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர்

(திருமலை)

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுஒன்றே ...

...பர் கல்லூரியில் இடம்பெற்ற இனங்களிடையே சமாதானம் பேணும் பேச்சுப் போட்டி ...

...வர் மனம்விட்டுப்பேசி ஒருவர் பிரச்சினையை மற்றவர் புரிந்து கொண்டு பிரச்சினை ...

# தேர்தல் முடிவை கேட்டு ஆச்சரியம் அடைந்தேன்

தென்மாகாண சபைத் தேர்தல் முடிவை ஏற்று ...

ஐ.தே. க அமரசிறி ...

உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
27-03-1994

**27-03-1994**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1459

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

43-4170, 41 9746, 27-7627, 26-2317, 28-9249, 26-6075, 28-1677, 24-4644, 26-6983, 28-2049, 22-4895, 26-1495, 41-9696, 41-9038.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

42-2317, 40-2573, 42-728, 27-5186, 26-1019, 41-6177, 24-5707, 24-7375, 26-7542, 40-9188, 42-1293, 28-4183, 27-5912, 24-4361, 41-2479, 28-0882, 28-7978, 27-9105.

---

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத
ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான

## பூங்காவனத் திருவிழாவை

முன்னிட்டு

சிவன்கோவிலடி இளைஞர்களால் நடாத்தப்பெறும்

## சிறப்பு நிகழ்ச்சிகள்

காலம்: 28. 3. 1994 திங்கட்கிழமை

இரவு நிகழ்ச்சிகள்:

மங்கள இசை

| விசேட நாதஸ்வரம் | விசேட தவில் |
|---|---|
| K. பஞ்சாபிகேசன் | K. புண்ணியமூர்த்தி |
| N. K. பத்மநாதன் | K. வீராச்சாமி |
| K. பஞ்சமூர்த்தி | K நித்தியானந்தன் |

பூந்தண்டிகையில் சுவாமி வெளிவீதி வலம் வருகையில் மயிலிட்டி திருப்பூர் இளைஞர்களின் சிலம்பு விளையாட்டுக்கள் அதனைத் தொடர்ந்து மேடை நிகழ்ச்சிகள், ஜெராம் குழுவினரின் வயலின் சோலோ இதனைத் தொடர்ந்து

இந்த மண் எங்களின் சொந்த மண் புகழ்

**S. G. சாந்தனின் இன்னிசைக் கானங்கள்**

இடம் பெறும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

இங்ஙனம்,

**சிவன்கோவில் இளைஞர்கள்**

(7863) சபம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுஒன்றே காணப்பட வேண்டும் என இந் நாட்டு மக்கள் விரும்புகின்றனர்- இன்றைய போரினால் வருடாந்தம் நாம் 2500 கோடி ரூபாவை இழக்கின்றோம், கடந்த பத்து வருட காலமாக நீடிக்கும் போரினால் பொருளாதாரம் நலிவடைந்துள்ளது. 40 வருடங்களாக போரிட்ட இஸ்ரேலும் பாலஸ்தீனமும் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் போது எமது நாட்டில் நாம் ஏன் ஒரு சமாதான தீர்வுக்கு வரமுடியாது, எவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பெர்னாண்டோ கேள்வி எழுப்பினார்.

திருமலை புனித சூசையப்பர் இனங்களிடையே சமாதானம் பேணும் பேச்சுப் போட்டி, விவாத அரங்கு ஆகியவற்றில் வெற்றி பெற்றோர்க்கான பரிசளிப்பு வைபவத்தில் ஆளுநர் பெர்னாண்டோ உரையாற்றினார்.

அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகளில் எல்லாம் இன்று சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, போர் மேகங்கள் சூழ்ந்திருக்கும் வேளையில் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என வல்லரசு நாடுகளிலிருந்து மூன்றாம் உலக நாடுகள் வரை எண்ணம் கொண்டு செயற்பட்டு வருகின்றன. சிறிய நாடான எமது நாட்டில் நாம் ஏன் யுத்தம் புரிய வேண்டும்? ஒருவருடன் ஒரு பிரச்சினையை மற்றவர் புரிந்துகொண்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாதா? கறுப்பின மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட தென்னாபிரிக்காவில் இன்று நெல்சன் மண்டேலாவும் டிகிளார்க்கும் சமாதான தீர்விற்காக முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்- அரபாத்தும் ராபினும் சந்தித்து கை குலுக்கும் போது ஒரே நாட்டில் வாழும் இரு இன மக்கள் ஏன் சந்தித்துப் பேச முடியாது- சந்திப்பதற்கான இடைவெளி என்ன என்பதை நாம் ஆராயவேண்டும் எனவும் ஆளுநர் லயனல் பெர்னான்டோ மேலும் தெரிவித்தார்.

---

## கூரேயின் விளக்கம்

(கொழும்பு)

தென்மாகாணசபை தேர்தல் முடிவுகளை தேசிய எழுச்சிப் போக்காக கருத முடியாது என அமைச்சர் சிறிசேன கூரே தெரிவித்துள்ளார்.

---

## தேர்தல்

தேர்தல் ஆணையாளர் மார்ச் 20-ம்திகதி வெளியிட்ட விசேஷ அறிக்கையில், ஏறாவூர் மற்றும் காத்தான்குடியில் தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த சில பொலிசார் மீது குற்றம் சாட்டியிருந்தார்.

மோசடிகளுக்கு உடந்தையாக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று தெரிய வருகிறது.

---

## யாழ்

கடந்த செவ்வாயன்று ஹமில்டன் வனசிங்கவை சந்தித்து யாழ். மாவட்ட நிலைமைகள் குறித்து பேச்சுக்கள் நடத்தினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

---

நீர்கொழும்பு குடாப்பாடு

# தமிழ் அகதிகளுக்கு அரசாங்கம் உதவவில்லை

நீர் கொழும்பு குடாப்பாடு பகுதியில் அண்மையில் பதற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து நீர்கொழும்பு முத்துமாரியம்மன் கோவிலில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு சமூக சேவைத்திணைக்களம் எதுவித உதவிகளையும் வழங்கவில்லை எனத்தெரிய வருகிறது, பொது அமைப்புகளே இங்கு தங்கியுள்ள சுமார் 125 குடும்பங்களைச்சேர்ந்த ஐந்நூறுபேருக்கும் உணவு வகைகளைச் சேகரித்து வழங்கி வருவதாகவும் கூறப்படுகிறது.

குடாப்பாடு பகுதியில் மீனவர்களின் வீடுகளில் வாடகைக்கு குடியிருந்தவர்களே அண்மையில் ஏற்பட்ட பதற்றம் காரணமாக இடம்பெயர்ந்தோராவர்.

## தபால்கள் இறக்கப்பட்டன

யாழ் குடாநாட்டுத்தபால் பொதிகள் 'வாதுவ' கப்பலில் இருந்து இறக்கப்பட்டு) கரைக்கு எடுத்து வரப்பட்டன, இக்கப்பலில் எடுத்து வரப்பட்ட 587 தபால் பொதிகளும் யாழ் பிரதம தபாலக ஊழியர்களால் தபாலகம்ஏற்றிவரப்பட்டன (யோ

# இப்படியும் ஒரு சாதனை

ஆசிரியை ஒருவர் ஒன்றரை மணிநேரத்தில் மூன்று பாடசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த மாற்றத்தினால் அவர் மார்ச் மாதச் சம்பளத்தைக் கூடப் பெறமுடியவில்லையாம். இச் சம்பவம் களுத்துறை கல்விக் கோட்டத்தில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட விஞ்ஞான உதவி ஆசிரியை ஜனாதிபதிக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

---


தென்மாகாண சபைத் தேர்தல் முடிவை ஏற்று எனது கட்சி அதற்கு தலை வணங்குகின்றது. ஆனால் இம் முடிவை கேள்விப்பட்டதும் நான் ஆச்சரியம் அடைந்தேன் என தென்மாகாண சபை முதல் அமைச்சராக ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிட்ட எம். எஸ். அமரசிறி தெரிவித்துள்ளார்.

"ஞாயிறு லங்கா தீப" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மேற்படி கருத்தை தெரிவித்துள்ள அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் தென் மாகாண மக்கள் 24-ம் திகதி அளித்த தீர்ப்பானது தனக்கு ஆச்சரியமாகவும், புதினமாகவும் இருப்பதாகவும் தன்னால் நம்ப முடியாத வகையில் மக்கள் தீர்ப்பு அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஐ.தே. க அமரசிறி

---

## 31-ம் நாள் நினைவலைகள்



## இராமலிங்கம் சுந்தரம்

(காளி கோவிலடி சங்கானை)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20- 03- 1913 | 26- 02- 1994 |

ஓர் திங்கள் சென்றாலும் முழுநிலவாய் எம்மனதில் நல் வார்த்தை மீளொருகால் சொல்லீரோ எம்தந்தாய் வல்லவனாய் இம் மண்ணில் நற்பணிகள் செய்தன்றோ புல்வினங்கள் வாழ்த்துகின்ற புதுமேனி எடுத்துவிட்டீர்.

இங்ஙனம்,

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

காளி கோவிலடி, சங்கானை.

(7864)